பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 07 | சனிக்கிழமை 20.01.2018 | கதிர் 76

**மீனவர் சடலமாக மீட்பு**

மூன்று நாள்களுக்கு முன்னர் கடலுக்குத் தனியாக ஒரு படகில் மீன்பிடிக்கச்சென்ற – வங்காலை 4ஆம் வட்டா ரத்தைச் சேர்ந்த – சென்ஜோன் குணசீலன் குரூஸ் (வயது – 50) என்பவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை முதல் காணாமல்போன இவரை சக மீனவர்கள் கடலில் தேடிய பக்கம் 18

# இயலாவிட்டால் ஒதுங்குங்கள்!



## தமிழ்த் தலைமைகளுக்கு இடித்துரைக்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜனவரி 20

“எம்முள் பலர் கூடி எமக்கென ஒரு வழி சமைத்தோம். எமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் அவற்றை உள்ளடக்கினோம். அவை கிடைக்க மாட்டா என்று தமிழ்த் தலைமைகள் தீர்மானித்தால் தமது தலைமைத்துவத்தை வேறு யாரிடமாவது கொடுத்து விட்டு ஒதுங்கிக் கொள்வதே உசிதம்.”

– இவ்வாறு இடித்துரைத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன். பக்கம் 18

## தேர்தல் களத்தில் 60 கிரிமினல்கள்!

கொழும்பு, ஜன.20

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் அறுபது பேர் மோசமான கிரிமினல் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்பது கண்டறியப்பட்டிருப்பதாக ‘மார்ச் 12’ இயக்கம் அறிவித்துள்ளது.

341 உள்ளூராட்சி சபைகளில் 8 ஆயிரத்து 356 உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொள்வ பக்கம் 18

## பிரசாரக் கூட்டங்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நடத்தப்படும் பரப்புரைக் கூட்டங்களுக்கு நேற்று நடைமுறைக்கு வரும் வகையில் புதிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

“கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் கூட்டம் நடை பக்கம் 18

### மண்டைதீவுப் பகுதியில்
## கண்ணிவெடிகளுடன் கடலில் பெட்டி மீட்பு!



யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணம் – மண்டைதீவுக் கடலில் மிதந்துவந்த மரப் பெட்டியொன்றிலிருந்து நான்கு பக்கம் 18




ஊடக முதலாளியை அரசியல்வாதியாக ஏற்றாக வேண்டும் என்ற விதிமுறையைத் தனக்குத் தானே விதித்துக் கொண்டதால் விழி பிதுங்கி நிற்கின்றதாம் தமிழரசு...!

இந்தச் சிக்கலில் இருந்து பக்கம் 03

## பிணைமுறிக் குற்றவாளிகளுக்கு சிறைக் கதவு திறந்தேயுள்ளதாம்!

**இப்படிக் கூறுகின்றார் ஜனாதிபதி**

பிணைமுறி விவகாரத்தில் குற்றவாளிகளாக அடையாளம்காணப்படுபவர்களுக்குச் சிறைக் கதவுகள் திறந்திருக்கின்றன என்று ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வெல்லவாயவில்நேற்று பக்கம் 18

# 3 வயதுப் பெறாமகளை கோடரியால் கொத்தி தன் தாயையும் வெட்டிப் படுகாயப்படுத்திய மகன்

## பின் தானும் நஞ்சருந்தித் தற்கொலை; வண்ணார்பண்ணையில் கொடூரம்



யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணம் – வண்ணார் பண்ணைப் பகுதியில் நபர் ஒருவர் தனது தம்பியின் மூன்று வயது பெண்குழந்தையைசிறிய கண்டம்கோடரியால் வெட்டிப்படுகொலைசெய்தமையுடன் தமது தாயாரையும் குரூரமாக வெட்டிச்சரித்தார். பின்னர் தானும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கொடூரத்தினால்யாழ்ப்பாணம் – வண்ணார் பண்ணைப் பகுதி நேற்று பெரும் அதிர்ச்சியிலும்சோகத்திலும்ஆழ்ந்தது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் வண்ணார் பண்ணை வடமேற்குப் பகுதியில் பத்ரகாளி அம்மன்கோயில்பின் வீதியில் இக்குரூரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கோகிலகுணரத்தினம் பரமேஸ் வரன் (ஈஸ்வரன் – வயது 33) என்ற இளைஞரே இப்படிக் கொடூரத்தைப் புரிந்த பின்னர், தன்னைத் தானே மாய்த்துக் கொண்டிருக்கின்றார்.

இந்தக் கொடூரச் சம்ப பக்கம் 03



## குழந்தையை வெட்டியவர் முன்னாள் போராளியாம்!



யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்ப்பாணம் – வண்ணார் பண்ணையில் நேற்று மூன்று வயதுக் குழந்தையை வெட்டிக்கொன்ற, குழந்தையின் பெரிய தகப்பனார் குறித்து பொலிஸ் விசாரணையில் புதிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

கொலையாளி முன்னாள் போராளி. அவர் மறுவாழ்வின் பின் குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டார். அவர் அரபு நாடுகளில் தொழில் புரிந்து விட்டு தற்போது உள்ளூரில் நகை வேலை செய்து வருகிறார். பக்கம் 18

## பிள்ளைக்கு அப்பிள் வாங்கி வந்த பெற்றோர் குழந்தையின் சடலத்தைக் கண்டு மயங்கினர்

தமது குழந்தைக்கு நேர்ந்த கொடூரம் தெரியாமல், அந்தக் குழந்தைக்கு அப்பிள் மற்றும் உணவுப் பொருள்களை வாங்கி வந்த பெற்றோர் குழந்தையின் வெட்டிச் சாய்க்கப்பட்ட சடலத்தைக் கண்டு மயங்கிச் சரிந்தனர்.

நேற்று வண்ணார்பண்ணையில் படுகொலை செய்யப்பட்ட குழந்தையின் பெற்றோருக்கே இந்த அவலம் நேர்ந்தது.

நேற்றுக் காலை ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்த பெற்றோர் தமது வைத்திய பரிசோதனையை முடித்துக் கொண்டு, பக்கம் 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிப்பு: சிவப்பு வலயமாக சில பகுதிகள் அறிவிப்பு

வவுனியா, ஜன. 20

வவுனியா மாவட்டத்தில் சில இடங்கள் 'டெங்கு சிவப்பு வலய' பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 70 பேர் வரை டெங்கு நோயின் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர் என வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் கு. அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. வவுனியாவின் கற்குழி மற்றும் நெளுக்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து கடந்த 16 நாள்களில் 70 பேர் டெங்கு நோய் காரணமாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதனால் வவுனியாவின் கற்குழி, நெளுக்குளம் மற்றும் செட்டிக்குளத்தின் சில பகுதிகள் 'டெங்கு சிவப்பு வலயமாக' அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் டெங்கு சிவப்பு வலயத்தில் 16 நாள்களில் எழுபது பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் கூடுதலானவர்கள் கொழும்பு உட்பட வெளி மாவட்டங்களிற்கு சென்று வருபவர்களாகவே இருக்கின்றனர். இதே போல், இரண்டு வாரத்திற்கு முன்னரும் டெங்கு நோயின் தாக்கத்தில் ஒருவர் மரணமடைந்திருந்தார்.

எனவே, வவுனியா மற்றும் ஏனைய மாவட்டங்களிற்கு செல்லும்போது டெங்கு தாக்கம் அதிகமுள்ள பகுதிகள் என வைத்தியர்கள் சந்தேகம் வெளியிடும்போது அதற்கான உரிய அவதானத்தை எடுக்க வேண்டும்.

மேலும், அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

டெங்கு நோய்குரிய அறிகுறி தெரியும் பட்சத்தில் அருகில் உள்ள வைத்திய சாலைக்கு சென்று வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-100)

# கசிப்பு விற்றவர் பொலிஸால் கைது

வவுனியா, ஜன. 20

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு விற்பனை மேற்கொண்ட வடிவேல் சதீஸ்குமார் வயது 36 சிதம்பரந கரைச் சேர்ந்த நபர் ஒருவரை சட்டவிரோதமான முறையில் 750 மில்லி மீற்றர் போத்தலில் கசிப்பு விற்பனை செய்து கொண்டிருந்த போது அந்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.



மேலதிக விசாரணைகளுக் காக வவுனியா பொலிசாரிடம் ஒப்படைக்கபட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (க-100)

# தேசிய ரீதியான குத்துச்சண்டை போட்டியில் வவுனியாவிற்கு ஐந்து பதக்கங்கள்!

வவுனியா, ஜன. 20

தேசிய ரீதியில் நடைபெற்ற வூசோ குத்துச்சண்டை போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த வீரர்கள் ஒரு தங்கப் பதக்கம் உட்பட ஐந்து பதக் கங்களை சுவீகரித்துள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் கடந்த 12, 13, 14 ஆம் திகதிகளில் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட வூசோ குத்துச்சண்டை சுற்றுப் போட்டியில் வடமாகாணத்தின் வூசோ குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர் செல்வரத்தினம் நந்தகுமார் தலைமையில் இரண்டு பெண் வீராங்கனைகள் உட்பட ஏழு வீரர்கள் பங்கு கொண்டிருந்தனர்.



இரு வீரர்கள் தாய்லாந்துக்கு பயணம்

'கண் போய்ஸ்' விளையாட்டுக் கழகத்தின் குத்துச்சண்டை வீரர்களுக்கான தங்கசாமி தர்சிகா 23 வயதுக்குட்பட்ட 48 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், தியாகராசா நாகராஜா 19 வயதுக்குட்பட்ட 48 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், புருசோத்துமன் சியாமினி 19 வயதுகுட்பட்ட 48 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும், குகனேநந்திரன் கபிசன் 19 வயதுக்குட்பட்ட 70 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும், மகேந்திரராசா பிரவீந் 23 வயதுக்குட்பட்ட 70 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றிருந்தனர்.

தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை பெற்ற வீரர்கள் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் ஆசியநாடுகளுக்கிடையிலான குத்துச்சண்டை போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-100)

# பல்கலைக்கழக அனுமதிக்கான கருத்தரங்கு வவுனியாவில்

வவுனியா, ஜன. 20

பல்கலைக்கழக அனுமதிக் கான தமிழ் மொழிமூல வழிகாட்டல் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா வளாக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களை தெரிவு செய்தல், பாடங்களை இனங்காணல் தொடர்பான வழிகாட்டல்கள் இடம்பெறவுள்ளது.

வவுனியா வளாக சிரேஸ்ட உதவிப்பதிவாளர் ஆர்.ஜெயக்குமார், வவுனியா வளாக விரிவுரையாளர் ரி.கார்த்தீஸ்வரன், இரசாயனவியல் ஆசிரியர் ஏ.எஸ்.பரந்தாமன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, இலவசமாக அனுமதியுடன் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வவுனியா வளாக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (க-100)

# வவுனியாவில் தேர்தல் முறைகேடு தொடர்பில் 31 முறைப்பாடுகள்!

வவுனியா, ஜன. 20

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் 31 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என உதவி மாவட்ட செயலாளரும், மாவட்ட தேர்தல் முறைப் பாட்டு பிரிவு பொறுப்பதிகாரியுமான என்.கமலதாசன் தெரிவித்துள்ளார்.

நேற்று தேர்தல் முறைப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் தொடர்பில் பாரிய குற்றச்செயல்கள், முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

எனினும் சிறியளவிலான தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் இதுவரை 31 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதில் அதிகமாக சுவரொட்டிகள் காட்சியப்படுத்தியமை தொடர்பிலேயே கிடைக்கப்பெற்றுள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-100)

# பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரால் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருக்கு அச்சுறுத்தல்!

கிளிநொச்சி, ஜன. 18

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரால் தனக்கு நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடு சந்திப் பகுதியில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தினால் பொது மக்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

நாளாந்தம் சந்தை மற்றும் இதர தேவைகளுக்கு குறித்த பகுதி பொது மக்கள் அதிகளவு வந்து செல்கின்ற இடமாக காணப்படுவதனால் அங்கு வருகின்ற பொது மக்களுக்கு கள் விற்பனை நிலையத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் பாவனையாளர்களால் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

விற்பனை நிலையத்தினை அங்கிருந்து அகற்றி பிரிதொரு இடத்திற்கு மாற்றம் செய்யுமாறு பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட பல பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பொது மக்கள் ஒப்பமிட்டு அரசியல் வாதிகள் அரச அதிபர் உள்ளிட்ட பலருக்கு கோரிக்கை கடிதம் அனுப்பியிருந்தனர்.

இது தொடர்பிலேயே கிளிநொச்சி பனை தென்னை வள அபிவருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மதனரூபன் இரணைமடுச் சந்தியில் வைத்து தனக்கு நேரடியாக அச்சுறுத்தல் விடுத்ததாக பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (க-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்மாட் தொலைபேசி வைத்திருப்போர் அனைவரும் இன்று ஊடகவியலாளர்கள்

## அதுதான் நிலைமை என விசனிக்கின்றார் நிதி, ஊடக அமைச்சர்



கொழும்பு, ஜன.20

சம்பிரதாயபூர்வமான ஊடகவியலாளன் மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளமையால், ஸ்மார்ட் தொலைபேசிகளை வைத்திருப்பவர்கள் அனைவரும் தற்போது செய்தியாளர்களாக மாறியுள்ளனர் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தணிக்கை அல்லது சட்டத்தின் மூலம் ஊடகத்தை கட்டுப்படுத்த முடியாது போயுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைப் பத்திரிகை சபை மாத்தறை மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்காக ஒழுங்கு செய்திருந்த கருத்தரங்கில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு அமெரிக்காவில் தொழில்களில் நம்பிக்கை தன்மை குறித்து கருத்தாய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வுப் பட்டியலில் ஊடகவியலாளர்களும் அரசியல்வாதிகளுமே இறுதியில் இருந்தனர்.

அப்படியானால், அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் இன்று ஒரே படகில். அரசியல்வாதிகளுக்கு ஏன் அப்படி நேர்ந்தது என்ற விடயத்தை நான் கூறப்போவதில்லை.

ஆனால், சம்பிரதாய பூர்வமான ஊடகவியலாளர்கள் மீதான நம்பகத்தன்மை மக்களிடம் குறைந்து வருகிறது.

அடிப்படையற்ற செய்தி அளிப்பே இதற்குக் காரணம். அந்தக் காலத்தில் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டால், அவற்றுக்கு அடிப்படை இருந்தது. தற்போது அப்படியல்ல.

ஊடகவியலாளன் பல்வேறு நபர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தேவைக்கு அமைய செய்திகளை உருவாக்குகின்றான்.

எனினும் தற்போதைய நவீன சமூகத்தில் பொய்யான பத்திரிகைகளுக்கு எதிர்காலம் இல்லை. அது உறுதியாகி வருகிறது. ஊடகம் தொடர்பான நம்பிக்கை இல்லாமல் போகும். - எனவும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.




# பாடசாலை 'கட்' அடித்து விட்டு மது அருந்திய மாணவர்கள் கைது

## கிளிநொச்சி - சாந்தபுரம் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி சாந்திபுரம் பிரதேச பாடசாலை மாணவர்கள் 11 பேர் பாடசாலைக்குச் சமுகமளிக்காது மதுபானம் அருந்தி சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலே அவர்கள் கைது செய்யப்பட்டு மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த மாணவர்களின் பெற்றோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பதில் நீதிவான் எஸ். சிவபால சுப்ரமணியம் உத்தரவிட்டார்.

எட்டு மாணவர்களுடைய பெற்றோர்கள் மாத்திரமே நீதிமன்றில் ஆஜரானமையை அடுத்து மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் கடுமையாக அறிவுரை வழங்கி அந்த மாணவர்களை பெற்றோரிடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பெற்றோர் ஆஜராகாத மாணவர்கள் மூவரையும் அவர்களது பெற்றோர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகும் வரையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் காவலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுபடுவதற்கு தமிழரசுக்கு வழமைபோல கனடாவில் இருந்து ஆலோசனை வந்திருப்பதாக உள்வீட்டுத் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

"ஊடகங்கள் என்ன ஜஜுபி. அவற்றைத் தோற்கடித்துத் தேர்தலில் வெல்வோம்" - என்று திமிறுகிறார் தமிழரசின் தானைத் தளபதி சுமந்திரன்.

ஆனால், தான் இடம் கொடுத்தமையால் மடம் கட்டியவர், ஊடக முதலாளியா, ஊடகப் போராளியா என்று தடுமாறி நிற்கின்றார் மாவையர். பத்திரிகைக்குப் பயந்து கட்சி நடத்தும் நிலைமையில்தான் அவர்.

ஆனால் சுமந்திரனின் பிரச்சினை வேறு.

"ஓர் ஊடகத்துக்காக வழக்குப் பேசுவதா அல்லது அந்த ஊடகத்துக்கு எதிராக வழக்குப் போடுவதா என்பது தெரியவில்லை." - என்று மிதப்பாகப் பேசுகின்றார் அவர்.

வழக்குகள் சிலவற்றில் வசமாகச் சிக்குண்டிருக்கும் அந்த ஊடகம் அதற்காக சுமந்திரனிடம் நெளிய வேண்டிய நிலைமை. அதுதான் சுமந்திரனின் மிதப்புக்குக் காரணம்.

ஆனால், மாவையரோ பாவம். பத்திரிகையைக் கண்டு பயப்படும் அவரின் போக்கைப் பார்த்து கனடாத் தமிழரசாருக்குப் பெருங்கவலை.

"உள்ளூர் ஊடகத்துக்கு ஏன் அஞ்ச வேண்டும்? நாங்களே தமிழரசுக்கு என்று ஓர் ஊடகத்தைத் தொடங்கி விட்டால் முடிந்தது பிரச்சினை. ஊடகப் போராளியோ, முதலாளியோ யாருக்கும் பயப்படத் தேவையில்லை." - என்று ஐடியா கொடுத்திருக்கின்றார்கள் கனடாக்காரர்கள்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக இங்கு வந்து நிற்கும் கனடாப் பிரதிநிதிதான் இது பற்றித் தமிழரசாரிடம் தமது திட்டத்தை கவிழ்த்துக் கொட்டியிருக்கின்றார்.

"ஊடகத்தைத் தொடங்குவதற்குத் தேவையான பெரும் தொகை நிதியை அங்கு, இங்கு புரட்டி, நாங்கள் சேர்த்து தேடித் தருகின்றோம். ஆனால் நிறுவனம் லாபம் தரும் விதத்தில் இயங்கும் வரை தேவையான மாத நிதியை நீங்கள் தேடிக் கொள்ள வேண்டும்." - என்று குறிப்பிட்ட அந்தக் கனடா பிரதிநிதி, அப்படி மாதாந்தச் செலவினத்துக்கும் நிதி திரட்டுவதற்கும் ஒரு 'ஐடியா' கொடுத்திருக்கின்றார்.

மாதாந்தம் ஒவ்வொரு எம்.பியும் பத்தாயிரம் ரூபா, ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினரும் ஐயாயிரம் ரூபா, தெரிவாகும் ஒவ்வொரு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தலா ஆயிரம் ரூபா எனக் கட்சியின் பத்திரிகை நிதிக்காகத் தமது வேதனத்தில் இருந்து வழங்க வேண்டும் என்பதுதான் அந்த ஐடியா.

இந்த நிதியை வைப்பிட்டுக் கணக்கைக் கொண்டு நடத்துவதற்காக ஒரு வங்கிக் கணக்கை உடன் ஆரம்பியுங்கள் என்றும் கூட அந்தக் கனடா பிரதிநிதி அழுத்தம் கொடுக்கின்றாராம் என்று கேள்வி.

நடக்கும் தேர்தலுக்காகக் கனடாக்காரரின் 'உண்டியல்' வருகைக்குக் காத்திருக்கும் நம் உள்ளூர் தலைமைகள், அவரின் இந்த ஆலோசனைகள் எல்லாவற்றுக்கும் இப்போதைய பாட்டுக்குத் தலையாட்டி வைப்போம் என்று தீர்மானித்து 'ஆமாம் சாமி' என ஒப்புதல் அளித்திருக்கின்றன எனவும் தகவல்.

ஊர் கூடித் தேர் இழுப்பது போல, அரசியல் உறுப்பினர்கள் கூடிப் பத்திரிகை நடத்தும் திட்டம்.... உருப்படுமா? தெரியவில்லை...!

- மின்னல் -

## 3 வயதுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தில் தனுஷன் நிக்ஷயா (வயது மூன்று) என்ற குழந்தையே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த பரமேஸ்வரி (வயது - 55) என்ற மாது யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருபவை வருமாறு:-

மேற்படி குழந்தையின் தாயும் தகப்பனும் நேற்றுக் காலை வீட்டில் இல்லாத சமயத்தில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

சிறுமியின் தாயார் கர்ப்பவதியான நிலையில் அவரை அவரது கணவர் நேற்றுக் காலை ஆஸ்பத்திரிக்குப் பரிசோதனைக்குக் கூட்டிச் சென்றிருக்கின்றார்.

அச்சமயம், அக் குழந்தையும், குழந்தையின் தந்தையாரின் தாயான பரமேஸ்வரியும் மட்டுமே வீட்டில் இருந்துள்ளனர்.

குழந்தையின் தந்தையின் மூத்த சகோதரனான ஈஸ்வர் என்பவர் அந்தச் சமயம் அங்கு வந்திருக்கின்றார்.

இவருக்கும் இந்தக் குடும்பத்துக்கும் இடையில் நீண்ட காலமாகப் பிரச்சினைகள் இருந்து வந்தமையால் இவர் பல வருடங்களாக அந்த வீட்டிற்குச் செல்வதைக் குறைத்திருந்தாராம்.

வீட்டுக்கு வந்த அவர், தாயாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்னர், தான் மறைத்து எடுத்து வந்திருந்த கண்டம் கோடரியால் தனது தாயையும் அவரது பாதுகாப்பில் இருந்த மூன்று வயதுக் குழந்தையையும் கொடூரமாக வெட்டிச் சாய்த்திருக்கின்றார்.

குழந்தை அந்த இடத்திலேயே உயிரிழந்தது. அந்த இளைஞரின் தாயார் படுகாயங்களுடன் துடிதுடித்துக் கொண்டு கிடந்தார்.

அந்தக் கொடூரத்தைப் புரிந்த நபர் தானும் நஞ்சருந்தி அவ் விடத்திலேயே வீழ்ந்தார்.

அந்த வீட்டில் எழுந்த அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அயலவர்களினால் உறவினர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

அவர்கள் படுகாயமடைந்த அந்த மாதுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றமையுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

இக்கொடூரத்தைப் புரிந்த நபரும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு விரையப்பட்டார். எனினும், அங்கு சேர்க்கப்படும் போதே அந்த நபரும் உயிரிழந்து இருந்தார் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நபர் நகைத் தொழில் செய்பவர் என்று கூறப்படுகின்றது. நகை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் பொட்டாசியம் வகை இரசாயனத்தை உட்கொண்டு அவர் தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு நேற்றுப் பிற்பகல் சென்ற யாழ். பதில் நீதிவான் இராமகமலன் குழந்தையின் சடலத்தைப் பார்வையிட்டமையுடன், சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல உத்தரவிட்டார்.

யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ)

# குளிரான இரவுகள் தொடருமாம்

நாட்டின் பல பாகங்களில் குளிரான இரவுகளுடனும், விடியல்களுடனும் கூடிய வரண்ட காலநிலை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அடுத்த வரும் நாட்களில் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களில் அதிகாலை நேரங்களில் உறைபனியை அவதானிக்கலாம். ஏனைய பாகங்களில் பொதுவாக சீரான காலநிலை நிலவும்.

வடக்கு, ஊவா, வடமேல் மாகாணங்களிலும், அம்பாறை, அனுராதபுரம், அம்பாந்தோட்டை மாவட்டங்களின் சில இடங்களிலும் மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் எனவும் திணைக்களத்தின் வானிலை அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி விபத்தில் ஒருவர் சாவு

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி - புதுமுறிப்பு பாலா கடை சந்தி பகுதியில் நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

செல்வாநகர் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தியாகராசா (வயது 28) என்பவரே பலியாகியுள்ளார்.

உள் வீதியிலிருந்து பிரதான வீதிக்கு இந்த மூவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் நுழைய முயன்ற சமயம் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

முன்னால் சென்ற பஸ் ஒன்றை விலத்தி பிரதான வீதியை அடைந்த மோட்டார் சைக்கிள் அச்சமயம் அங்கு வந்து கொண்டிருந்த டிராக்டருடன் மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அவர்களில் ஒருவர் சிகிச்சைகள் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர்கள் தலைக் கவசம் அணிந்து பயணித்திருந்தால் இறப்பை தடுத்திருக்க முடியும் என விபத்தை நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர்.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதி ஆணைக்குழு குறித்து அதிகப்பிரசங்கித்தனம் வேண்டாம்

இலங்கை மத்திய வங்கியில் பிணை முறிகளை விற்பனை செய்ததில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்குத் தாம் நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவைப் புகழ்ந்து தள்ளி உள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

*“அரசியல் விரோதிகள் எதனைக் கூறிய போதும், இந்த ஆணைக்குழுவே இந்த நாட்டில் இதுவரையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களில் மிகவும் தூய்மையாகவும், வெற்றிகரமாகவும் செயற்பட்ட ஆணைக்குழுவாகும்.*

*“மத்திய வங்கி மோசடி தொடர்பாக நான் நியமித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பக்கச்சார்பின்றி, சுயாதீனமாகவும் நீதிமன்றம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதித்தும் செயற்பட்டிருக்கின்றது.”*

- இப்படிப் புகழாரம் சூட்டியிருக்கின்றார் ஜனாதிபதி சிறிசேன.

தாம் நியமித்த ஆணைக்குழு குறித்து தற்புகழ்ச்சிப் பாணியில் இப்படி அவர் கூறிய கருத்து அரசியல், தார்மீக ரீதியில் சரியானதா என்பது நோக்கற்பாலது.

இலங்கையின் சரித்திரத்தில் இத்தகைய பல விடயங்களுக்காக அவ்வப்போது ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படுவது வழமைதான்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை 1978 இல் வந்த போது, அதற்கு முன்னர் 1970 முதல் 1977 வரை ஆட்சியில் இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசின் அத்துமீறல் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்வதற்காக இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அச்சமயம், எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா போன்ற பலரின் குடியியல் உரிமைகளைப் பறிப்பது வரையான தொடர் நடவடிக்கைகளுக்கு இந்த ஆணைக்குழு வழி செய்தது.

அதன் பின்னரும், இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலம் வரை, இத்தகைய பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு விட்டன. அவற்றில் பல, சமர்ப்பித்த இறுதி அறிக்கைகள், பரிந்துரைகள் கூட வெளியே வரவில்லை. ஜனாதிபதிகளிடம் சமர்ப்பிக்கப் பட்ட சில இறுதி அறிக்கைகள் என்னவாயிற்று என்பதே மர்மமாகும் நிலைமை ஏற்பட்டிருந்தது. சில அறிக்கைகளைத் தேடும் நிலைமையும் இருக்கின்றது. சில ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் எவ்வாறு மாயமாகின என்பது குறித்து இன்னோர் ஆணைக்குழு அமைத்து விசாரித்தால் என்ன என்று கருதும் அளவுக்கும் நிலைமை உண்டு.

அவ்வப்போது தோன்றும் அரசியல் பிரச்சினைகளை அன்றைய நிலையில் சமாளிப்பதற்காக - ஒரு கண்ணாமூச்சி விளையாட்டாக - ஆணைக்குழு நியமித்து, காலத்தை இழுத்தடித்து, விடயத்தின் தீவிரம் தணிந்ததும் அதை அப்படியே கைவிட்டு விடும் போக்கும் கூட இடம்பெற்றுள்ளது. அதாவது, ஒரு சமாளிப்பு நடவடிக்கைக்காக ஆணைக்குழு நியமிக்கும் பண்பியல்பும் கூட இருந்துள்ளது எனலாம்.

அவற்றுடன் ஒப்பிடுகையில் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு வித்தியாசமானதுதான்.

ஆட்சியில் இருக்கும் ஓர் அரசின் ஓர் அங்கத்துக்கு எதிராக அந்த அரசின் காலத்திலேயே விசாரணை நடத்தி, அதிரடி விடயங்களை அம்பலப்படுத்தி, பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது இந்த ஆணைக்குழு என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால், ஜனாதிபதி பீற்றிக் கொள்வது போல இந்த ஆணைக்குழு, பக்கச்சார்பின்றியும், சுயாதீனமாகவும், நேர்மையாகவும், நீதிமன்றம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதித்தும் செயற்பட்டிருப்பதாகக் கூறுவது சந்தேகத்துக்குரிய விடயம்தான்.

ஆணைக்குழு கண்டறிந்த விடயங்கள் உண்மையாக இருக்கலாம். ஆனால், அது கண்டறிந்த முறைமை - சட்டத்தின் பார்வையில் சரியானதா என்பது கேள்விக்குரியதே.

இந்த ஆணைக்குழுவின் கீழ் விடயங்களை விசாரணை செய்த புலனாய்வுத் தரப்பும், விடயத்தை (வழக்கை) தொடுத்த தரப்பும் ஒன்று. இரண்டுமே சட்டமா அதிபர் திணைக்களம்தான்.

அதாவது, பொலிஸ் வேலையையும், வழக்குத் தொடுநர் வேலையையும் சட்டமா அதிபர் திணைக்களமே செய்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் இச்செயற்பாடு தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் ஓர் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக, ஒரு வழக்கை புலனாய்வு விசாரணைக்கு உட்படுத்திய சட்டமா அதிபர் திணைக்களம், தனது திணைக்களக் கட்டடத்துக்குள் வைத்து, விசாரணைக்கு உட்படுத்தியோரை சித்திரவதை செய்தது, மனிதாபிமானமற்ற - கொடூர முறையில் - நடத்தியது என்ற குற்றச்சாட்டு இந்த வழக்கின்கீழ்தான் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்ட ரீதியில் நலன் முரண்பாட்டு சர்ச்சை (Conflict of Interest) இருப்பதைக் கேள்விக்கு உட்படுத்தியிருக்கும் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதான உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்தால்தான், இந்த ஆணைக்குழுவின் செயற்பாடு சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்பது முடிவாகும். அதுவரையில் இந்த ஆணைக்குழு குறித்து ஜனாதிபதி அதிகம் பீற்றிக் கொள்ளாமல் அடக்கி வாசிப்பதே முறையாகும்.

# குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது பெர்ப்பெச்சுவல் நிறுவன இலாபம்!



கொழும்பு, ஜன. 20

பிணைமுறி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில், ‘பெர்ப்பெச்சுவல் ட்ரெஷரீஸ்’ நிறுவனம் பெற்ற இலாபம் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது என ‘ஊழலுக்கு எதிரான குரல்’ என்ற அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தவை வருமாறு:-

பிணைமுறி மோசடி 2015 - 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அக் காலப்பகுதிக்குள் பெர்ப்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனம் ஆயிரத்து 150 கோடி ரூபாவை சட்ட விரோதமான முறையில் இலாபமாகச் சம்பாதித்துள்ளது என ஜனாதிபதி ஆணைக்குழு

### ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு தெரிவிப்பு

விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 2016 மார்ச் 31 வரையான காலப் பகுதிக்கான கணக்கு விவரங்களை மட்டுமே ஆணைக்குழு விசாரணை செய்துள்ளது. இருந்த போதிலும், மத்திய வங்கி தலைவராக அர்ஜுன மகேந்திரன் 2016 ஜூலை வரை பதவி வகித்துள்ளார். அதுமட்டுமன்றி, 2016 செப்ரெம்பர் வரை பெர்ப்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்திற்கான இலாப, நட்ட அறிக்கை அர்ஜுன் அலோஷியஸுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2016 ஏப்ரல் முதல் செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில், 681 கோடியே 30 லட்சம் ரூபாவை பெர்ப்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது. எனினும், இது ஆணைக்குழு அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இதனடிப்படையில், மேற்படி மோசடி குறித்த விசாரணையில் மத்திய வங்கி தனது பங்களிப்பைச் சரியாகச் செய்துள்ளதா என்ற கேள்வி எழுகிறது. மேலும் பெர்ப்பெச்சுவல் ட்ரெஷரீஸிடமிருந்து ஆயிரத்து 160 கோடி ரூபா அன்றி, ஆயிரத்து 825 கோடி ரூபாவைப் பெற்றால்தான், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் முழுமையாக ஈடுகட்டப்பட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## வளர்மதி சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் குரும்பசிட்டி கலைஞானி மண்டபத்தில் நிலையத் தலைவர் அ.சக்திவேல் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, வலி. வடக்குப் பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதன், கௌரவ விருந்தினராக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தி யோகத்தர் சிவயோகம் செல்வவிநாயகம், குரும்பசிட்டி கிழக்கு கிராம அலுவலர் ஜெயவிந்தன் ஆகியோர் கலந்த கொள்வர். (இ)

## குரு சமர்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜன. 20

குருவும் வயலின் வித்துவானுமாகிய அமரர் கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ. சி. சர்வேஸ்வர சர்மாவின் 90 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சிஷ்யர்கள் வழங்கும் குரு சமர்ப்பணம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பகுதிநேர விரிவுரையாளர் சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீ.வாமதேவன், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இராசரத்தினம் குமாரவடிவேல் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## சாவகச்சேரியில் இன்று நாடக விழா

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் நாடக விழா இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாக தமிழ் கோட்டத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வில் எழிலுரையை ‘‘நாடகமும் மனிதமும்’’ எனும் தலைப்பில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க.இ.கமலநாதன் வழங்குவார். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் நாடகக் கல்லூரியின் தயாரிப்பாக கலாநிதி க.ரதிகரனின் நெறியாள்கையில் அன்ரன் செக்கோவின் ‘‘தான் விரும்பாத் தியாகி’’ எனும் நாடகமும் சித்தி விநாயகர் கலை மன்றத்தின் தயாரிப்பில் ‘‘மயானத்து மன்னன்’’ எனும் இசை நாடகமும் அரங்கேற்றப்படும். (இ)

## கலைத்தூது அழகியல் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 20

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெற உள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறையின் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராஜநாயகமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனும் கலந்து சிறப்பிப்பர். இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ)

## நாளை

21.01.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : பூரட்டாதி பி.இ. 4.59 வரை
திதி : சதுர்த்தி பி.ப. 1.33 வரை
சுபநேரம் : 12.34 – 2.04 வரை
இராகுகாலம்: 8.04 – 9.34 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கை - இந்திய நாடுகளின் 70 ஆம் ஆண்டு சுதந்திரதினத்தை முன்னிட்டு விசேட வைபவம்








கொழும்பு, ஜன. 20

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இலங்கை மற்றும் இந்திய நாடுகளின் 70 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட வைபவம் ஒன்றை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது.

"Bollywood and Beyond" என்ற தலைப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலாசார நிகழ்வு 'India and Sri Lanka 70' என்று பெயரிடப்பட்டிருந்தது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் கருஜயசூரிய, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள், ராஜத்தந்திரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இந்தியாவின் பிரபல்ய வயலின் வித்துவான் கலாநிதி எல்.சுப்பிரமணியம் பாடகி கவிதா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இசை நிகழ்ச்சியை வழங்கினர்.

இலங்கை- இந்திய நாடுகளின் இசைக் கருவிகளை கொண்ட விசேட கண்காட்சி ஒன்றும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து இலங்கையும் இந்தியாவும் சுதந்திரத்திற்குப் பின்னரான ஜனநாயகப் பயணத்தில் பொருளாதார அபிவிருத்திச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு முன்னோக்கிப் பயணிக்கின்றன எனத் தெரிவித்தார்.

(க)

சைட்டம் விவகாரம்

## ராஜித மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 20

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மீது குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளது.

அதனடிப்படையில், இலங்கை மருத்துவ சபையின் புதிய குழு ஊடாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சைட்டத்தை மீண்டும் சட்டபூர்வமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வைத்தே அரச அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித்த அளுத்கேவால் இந்த குற்றசாட்டு முன்வைக்கபட்டுள்ளது.

இதேவேளை, பிரதி அமைச்சர் ஹர்சடி சில்வாவால் வழங்கப்பட்ட இறுதித் தீர்மானத்தின்படி இதுதொடர்பான பிரச்சினை வலுப்பெற்றுள்ளதாக மாலபே தனியார் மருத்துவ கல்லூரி மாணவர்களின் பெற்றோர் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் நேய பயணம் ஒன்றை ஆரம்பிக்க மக்களுடன் வீதியில் இறங்கவும் தயார்

கொழும்பு, ஜன. 20

ஊழல் மோசடிகளுக்கு எதிராக மக்கள்நேய பயணம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மக்களுடன் வீதியில் இறங்கவும் நாம் தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.




நேற்றுமுன்தினம் பிற்பகல் கொஸ்கமவில் இடம்பெற்ற மக்கள் கூட்டமொன்றில் உரை யாற்றிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கறைபடிந்த அரசியல்வாதிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்கியபின்னரே நாம் பதவியிலிருந்து ஓய்வுபெறப்போகிறோம்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி நிகழ்ந்த தவறுகளைத் திருத்திக் கொள்வதற்குத் தம்முடன் இணையுமாறு முன்னாள் ஆட்சியாளர்கள் மக்களிடம் கோரிக்கை விடுக்கிறார்கள்.

இந்தக் கோரிக்கை காணாமல் போதல்களையும், ஆட் கொலைகளையும், ஊடகவியலாளர்கள் படுகொலைகளையும் மீண்டும் நிகழ்த்தக் கூடிய யுகத்தை நோக்கி நாட்டை திருப்பிச் செல்வதற்கு சமமானதல்லவா?

முன்னைய ஆட்சியாளர்கள் சர்வதேச அரங்கில் செல்வாக்கை இழந்திருக்கிறார்கள். மீண்டும் சர்வதேச சமூகத்தில் இலங்கையை நிர்க்கதி நிலைக்குத் தள்ளி எதிர்காலத்தை இருள்மயமாக்கக் கூடிய வேலைத் திட்டத்தை நோக்கித் திரும்பிச் செல்வதற்கு மக்கள் தயாராக இல்லை.

பெப்ரவரி 10 ஆம் திகதிக்குப் பின்னர் அரசியல் பேதமின்றி நாட்டை நேசிக்கும் சகல அரசியல் வாதிகளையும் ஒன்றிணைத்து ஊழல் எதிர்ப்பு தேசிய இயக்கத்தை ஆரம்பிக்கப்போகிறோம்.

இதில் இணைந்து கொள்ளுமாறு நாட்டை நேசிக்கும் சகலருக்கும் கௌரவமான முறையில் அழைப்பு விடுக்கிறோம்.

தேசத்திற்காக நிறைவேற்றிய பணிகளை எந்தவிதத்திலும் தாமதிக்க முடியாது. இந்தப் பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல நாட்டுக்குள் முன்னுதாரணமாகத் திகழக்கூடிய அரசியல் வாதிகள் உருவாக வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

## மஹிந்த.கட்சியின் மனு நிராகரிப்பு!

கொழும்பு, ஜன. 20

மகரகம நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மகரகம நகர சபைக்குத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவில் பெண் வேட்பாளர் ஒருவரின் பெயருக்கு பக்கத்தில் ஆண் என குறிப்பிடப்பட்டிருந்ததால் அந்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டிருந்து.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் உறுப்பினர்கள் 06 பேர் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையிலேயே, நேற்று உயர் நீதிமன்றத்தினால் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்களால் விசாரணைக்கு இந்த மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கொழும்பின் சில வீதிகள் மூடப்படும்

கொழும்பு, ஜன. 20

கொழும்பின் சில வீதிகள் புதிய நீர்க் குழாய் பொருத்தும் நடவடிக்கைகள் காரணமாக மூடப்படவுள்ளன எனப் பொலிஸாரால் மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், ஹெட்டியாவத்தைச் சந்தியில் இருந்து இப்பாவத்தைச் சந்திவரையான வீதியே மூடப்படவுள்ளது என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி நேற்று இரவு 9 மணி முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை முழுமையாக மூடப்படவுள்ளது.

இதனால், அந்த வீதியைப் பயன்படுத்தும் சாரதிகள் உட்பட அனைவரும் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு விதிக்கு உட்படாத

## வாகன இறக்குமதிக்கு இலங்கையில் தடை!

பாதுகாப்பு விதிகளுக்கு உட்படாத அனைத்து வாகன இறக்குமதிகளுக்கும் நிதி அமைச்சு தடை விதித்துள்ளது.

சாரதி மற்றும் பயணிகளுக்கான ஆசனப்பட்டி, சாரதி மற்றும் பயணிகளுக்கான பாதுகாப்பு பலூன்கள், Anti & Locking Breaking System standards ஆகிய பாதுகாப்பு விதிகளுக்கு உட்படாத வாகனங்களின் இறக்குமதியே இவ்வாறு தடைசெய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் முழுமையாகத் தடை செய்யப்படவுள்ளதாகவும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழடைந்த, பராமரிப்பற்ற கட்டடங்கள் இடிக்கப்படுகின்றன காத்தான்குடியில்!

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் டெங்கு நுளம்புகள் பரவும் சூழலைத் தவிர்ப்பதற்காக பாழடைந்த மற்றும் பராமரிக்கப்படாத கட்டடங்களைத் தகர்த்தெறியும் நடவடிக்கையைத் தாம் ஆரம்பித்திருக்கிறோம் என நகரசபைச் செயலாளர் எம். ஆர்.எப்.றிப்கான் தெரிவித்துள்ளார்.

நேற்று இந்த பாழடைந்த கட்டடக் காடுகளைத் துப்புரவு செய்யும் பணிகள் காத்தான்குடி நகரசபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் காத்தான்குடி பொலிஸாரின் துணையுடன் ஆரம்பிக்கப் பட்டன.





டெங்கு சூழலை தவிர்ப்பதற்காக

காத்தான்குடி முதலாம் குறிச்சிப் பகுதியில் ஆரம்பிக் கப்பட்ட இந்த நடவடிக்கையில் முதற்கட்டமாக நீண்ட காலமாக பராமரிக்கப்படாது பாழடைந்த நிலையிலுள்ள கட்டடங்கள் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டன.

இதற்கு முன்னர் இந்த வகையான பாழடைந்த இடங்களைப் பராமரிக்குமாறு அதன் உரிமையாளர்களுக்கு பல முறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன எனவும் தமது அறிவுறுத்தல்கள் உதாசீனம் செய்யப்பட்ட நிலையிலேயே கடைசியாக சிவப்பு எச்சரிக்கை அனுப்பிவைக்கப்பட்டது எனவும் அதன் பின்னரே அதிகாரிகள் இந்த நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மக்கள் அனைவருக்கும் நிச்சயம் வீடு கிடைக்கும்



## பழனி திகாம்பரம் கூறுகிறார்

நான் அமைச்சராக வந்தபின் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் இந்தியத் தூதுவரிடம் கதைத்து இந்திய வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன் என்று மலை நாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் நோர்வூட் பிரதேச சபைக்கு ஐ.தே.க. வின் யானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்றுமுன் தினம் மாலை நோர்வூட் வெஞ்சர் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் இந்த மூன்று வருட காலப் பகுதியில் வீடுகளைக் கட்டி வருகின்றோம். பாதைகளை அபிவிருத்தி செய்கின்றோம் பல உட்கட்டமைப்பு வசதிகளை செய்து வருகின்றோம்.

இந்திய அரசு 4 ஆயிரம் வீடுகளை வழங்கியது. அந்த வீடமைப்புத் திட்டமும் நீண்டகாலம் இழுத்தடிக்கப் பட்டது. தற்போதுஎனது அமைச்சின் ஊடாகவும் வீடமைப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே மக்கள் அனைவருக்கும் நிச்சயமாக வீடுகள் கிடைக்கும்.

மலையகத்தில் 50 வருட காலமாக ஆட்சி செய்தவர்களுக்கு கிராமம் ஒன்று அமைக்க முடியவில்லை, 7 பேர்ச் காணியை பெற்றுக் கொடுக்க முடியவில்லை, காணி உறுதிப் பத்திரத்தையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை, பிரதேச சபைகளையும் அதிகரிக்க முடியவில்லை, இதெல்லாம் செய்யாத இவர்கள் நாங்கள் இவ்வாறான மக்களுக்குத் தேவையான சேவைகளை முன்னெடுக்கின்ற பொழுது நாங்கள் செய்திருப்போம், நாங்கள் கேட்டிருப்போம், நாங்கள் கொண்டு வந்த திட்டத்தை தான் இவர்கள் முன்னெடுக்கின்றனர் என மக்கள் மத்தியில் கூறி வருகின்றார்கள்.

மலையகத்திற்கு என்று சொல்லி அதிகார சபை ஒன்று இல்லை, தோட்ட கம்பனியின் கீழ் இயங்கி வந்த ட்ரஸ்ட் நிறுவனத்தை வைத்துக்கொண்டு அவர்களின் கீழ் நாம் செயற்பட்டு வந்தோம். இந்த ட்ரஸ்ட் நிறுவனம் அரசிற்குப் பொறுப்புக் கூறும் நிறுவனம் அல்ல. கடந்த காலங்களில் ட்ரஸ்ட் நிறுவனத்தில் பெரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனையடுத்து தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஊடாக நானும், இராதாகிருஷ்ணன், மனோ கணேசன் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் சென்று இது தொடர்பாக கதைத்து இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தற்பொழுது அதிகார சபையை நாம் பெற்றுள்ளோம். இது தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றி.

இந்த அதிகார சபை அரசின் கீழ் செயற்படும். யாரும் ஊழல் செய்ய முடியாது. கடந்த காலங்களில் எம் மக்கள் கம்பனிகாரர்களிடம் பல பிரச்சினைகளை சந்தித்தனர். ஆனால், இன்று இவையெல்லாவற்றையும் மாற்றி இந்த அரசு பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கின்றது. தொடர்ந்தும் இந்த அரசு புதிய புதிய செயற்பாடுகளை முன்னெடுக்கும். எனவே, இந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# மட்டக்களப்பு ஓட்டோ விபத்தில் ஒருவர் பலி ; ஒருவர் படுகாயம்



மட்டக்களப்பு பாசிக்குடாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்தவர், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு பாசிக்குடா பிரதான வீதி சந்தியில் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்றது.

விபத்தில் கல்குடாவைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான மு.சூரியகுமார் (வயது 37)என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

பாசிக்குடா கடற்கரையில் இருந்து ஓட்டோவில் நண்பருடன் தனது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையில் ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்குத் தொலைத்தொடர்பாடல் ஊடக கற்கை நெறி தொடர்பில் விளக்கம்



பாடசாலை ஆசிரியர், ஆசிரியைகளுக்கு தொலைத்தொடர்பாடல் மற்றும் ஊடக கற்கை பற்றிய விளக்கம் அளிக்கும் வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்குரிய முதல் செயலமர்வு மாத்தறையில் இடம்பெறும். தென் மாகாண பாடசாலைகளில் ஊடகப் பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர், ஆசிரியைகள் செயலமர்வில் கலந்து கொள்வார்கள்.

இதனை இலங்கை பத்திரிகை பேரவை ஒழுங்கு செய்துள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டு விரிவுரையாற்ற உள்ளனர்.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் அமைச்சர் மங்கள சமரவீர பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

# பெண்களை அவமதிக்கும் வகையில் காட்சிக்கு விளம்பரப் பதாகை!

## அகற்றுமாறு பணிப்பு




பெண்களை அவமதிக்கும் வகையில் பொறிக்கப்பட்டிருக்கும் விளம்பர பதாகைகளை அகற்றுமாறு பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றையும் வெளியிட்டுள்ளார்.

ராஜகிரியவில், பெண்களை அவமரியாதைப்படுத்தும் வகையில் பொருத்தப்பட்டுள்ள பதாகை அகற்றப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இந்த விளம்பரப் பதாகை பிரபல உடற்பயிற்சி கூடத்தால் பொருத்தப்பட்டுள்ளது.

இதில் பெரல் ஒன்றும், இது பெண்களுக்குரிய தோற்றம் அல்ல என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளதுடன், பெண்கள் 'பெரல்' போல் இருக்கக் கூடாது என்ற விளம்பரம் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பெண்களை அவமதிக்கும் விளம்பரங்களை அனுமதிக்க மாட்டேன். இதனை அகற்றுமாறு நகர சபையிடம் கோரியுள்ளேன் என பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய சுகாதார தொலைக்காட்சியின் ஆரம்ப வைபவம் இன்று இடம்பெறுகிறது



கொழும்பு, ஜன. 20

தேசிய சுகாதார தொலைக்காட்சியின் ஆரம்ப வைபவம் இன்று கொழும்பில் இடம் பெறவுள்ளது.

பொது மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும் ஆரோக்கியமான மக்களை உருவாக்குவதற்குமான நோக்கில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றா நோய் குறித்து பொது மக்களுக்குத்தெளிவுப்படுத்துதல் குடும்ப சுகாதாரம் தொடர்பில் விரிவான தெளிவைப் பெற்று கொடுத்தல் போஷாக்கு விளையாட்டு மற்றும் குடும்ப வீட்டு வாழ்க்கை குறித்து தெளிவுப் படுத்துதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற இருக்கின்றன என சுகாதார அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் பிரசன்ன அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு கொழும்பு கலதாரி ஹோட்டலில் சுகா தார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தலைமையில் இடம் பெறவுள்ளது.

# காலி எல்பிட்டிய வைத்தியசாலையில் ரூ.200 கோடி செலவில் நோயாளர் விடுதி




கொழும்பு, ஜன. 20

காலி மாவட்டத்தின் எல்பிட்டி ஆதார வைத்தியசாலையில் நோயாளர் விடுதிக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தலைமையில் நேற்று ஆரம்பமாகின. இந்த வார்ட் தொகுதி 8 மாடிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்படும்.

இதற்காக 200 கோடி ரூபாவுக்கு மேலான தொகை செலவிடப்படவுள்ளது.

காலி கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் 9 மாடிகளைக் கொண்ட சிறுவர் வார்ட்டு தொகுதியை அமைப்பதற்குரிய அடிக்கல் நடும் வைபவமும் சுகாதார அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

### பல்கலை அனுமதி; விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 20

2017 ஆம், 2018 ஆம் கல்வி ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான பத்திரங்களை ஏற்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவிக்கையில் 2017 ஆம் ஆண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய 2017 ஆம், 2018 ஆம் கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழக அனுமதிப் பத்திரங்களை ஏற்பதற்கான கால அவகாசம் பெப்ரவரி 2 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# தகர்க்கப்பட்டுள்ள இனப்பாகுபாடு!





முன்னைய அரசின் ஆட்சி காலத்தில் நாட்டில் காணப்பட்ட இனப் பாகுபாடு தற்போது தகர்த்து எறியப்பட்டுள்ளது என கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட கொட்டகலை பிரதேச சபைக்கு ஐ.தே.கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் முகமாக கொட்டகலை வூட்டன் தோட்டத்தில் மக்கள் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நாட்டில் இனபாகுபாடு தகர்த்து எறியப்பட்டு நாட்டில் எந்த ஓர் இடத்திற்கும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் அலுவலகங்களுக்குக் கூட மக்கள் சென்று வரக் கூடிய சுதந்திரம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர வேண்டுமானால் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# மொழி ஆற்றலை விருத்திசெய்யும் நோக்குடன் தரம் 1, 2 இற்கு ஆங்கில பாடம் அறிமுகம்!

மொழி ஆற்றலை விருத்தி செய்யும் நோக்கத்துடன் அரச பாடசாலைகளில் தரம் ஒன்று மற்றும் தரம் இரண்டுக்குரிய வகுப்புக்களில் ஆங்கில பாடத்தை அறிமுகம் செய்வதென கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்குத் தேவையான பாடப் புத்தங்களை அச்சிட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் பத்மினி நாலிக்கா வெலி வத்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் எண்ணக்கருவுக்கு அமைவாக இந்தத் திட்டம் இவ்வாண்டு ஆரம்பிக்கப்படும். இது அடுத்த வருடம் முழுமையாக அமுல்படுத்தப்படவுள்ளது.

விசேட செயற்பாடுகள் மூலம் முதலாம் இரண்டாம் வகுப்புக் களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஆங்கில பாடம் போதிக்கப்படவுள்ளது.

இதற்காக ஆசிரியர், ஆசிரியைகளுக்கு விசேட பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தொலைத்தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சில் தரவு நிலையம்!

கொழும்பு, ஜன. 20

தொலைத் தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சுடன் இணைந்து, ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தரவு நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

இந்த தரவு நிலையம் 250 கோடி ரூபா செலவில் ஹோமாகம பிட்டிப்பன நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண விழாவில் இந்தியாவின் மத்திய அரசாங்கத்தை சேர்ந்த அமைச்சர் ரவி சங்கர்பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்மூலம் தரவுகளை நம்பகமாகச் சேமித்து வைத்து, கிளவுட் கம்பியூட்டிங் சேவைகளை வழங்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் வாக்குறுதிகளை வழங்கியவர்கள் மீண்டும் வருகின்றார்கள் மக்கள் முன்!

## வலி. கிழக்கு பிரதேச சபை சுயேச்சை குழு கூறுகிறது

கோப்பாய், ஜன. 20

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக் குழு மக்கள் மத்தியில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது. அண்மையில் அச்செழுவில் வேட்பாளர் சிவயோகராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தலைமையுரை ஆற்றுகையில், ''எங்கள் பகுதிகளுக்குக் கடந்த காலங்களில் அரசியல் கட்சிகள் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யவில்லை அதே போன்று பிரதேசசபையில் பங்கு பற்றிய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் எங்கள் பகுதிக்கு எந்தவிதமான பங்களிப்பும் செய்யாமல் எங்கள் கிராமத்தை ஓரங்கட்டி விட்டார்கள்.'' - எனக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரை யாற்றிய சுயேச்சைக்குழுத் தலைமை வேட்பாளர் கதிர்காமநாதன் (செல்வம்) பேசுகையில், ''கடந்த காலங்களில் மக்களிடம் ஏமாற்றி வாக்குப் பெற்றவர்கள் திரும்பவும் அடுத்த தேர்தலில் வந்து நிற்கின்றமையை நீங்கள் அறிவீர்கள். கடந்த காலங்கள் மக்கள் மத்தியில் பொய்யான வாக்குறுதிகளைக் கூறி வாக்குக் கேட்டு வருவதை அறிவீர்கள். சில இடங்களில் வழக்கில் இருக்கும் காணிகளில்குடியிருக்கும்மக்களுக்கு வீட்டுத்திட்டம் பெற்றுத் தருவதாகவும் தேர்தலுக்கு முன்னர் அதனைப் பெற்றுத் தருவதாகவும் பொய் சொல்லி வாக்குக் கேட்கின்றமை வழமையாகி விட்டது.

''இவ்வாறு மீண்டும் மீண்டும் மக்களிடம் பொய் சொல்லி வாக்குக் கேட்பது விநோதமானது. இன்னும் ஒரு கட்சி, தேர்தலுக்கு முன்னர் றோட்டுப் போட்டுத் தருவதாகவும் பொய்யான வாக்குறுதிகளைக் கூறி மக்களை ஏமாற்றி வாக்குகள் பெறும் தந்திரங்களை இப்போதும் அரங்கேற்றுகின்றன. இப்படியான ஏமாற்று வித்தையை மக்கள் நன்கு அறிவார்கள்.

''மக்களே பொய் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள். இம்முறை நாம் சுயேச்சைக் குழுவில் வாளிச்சின்னத்தில் போட்டியிடுகின்றோம். எங்களை வெற்றிபெறச் செய்ய எமக்கு வாக்களியுங்கள். நாம் வெற்றி பெறுவதன் மூலம் மக்களை அணிதிரட்டி சமூக அபிவிருத்திக்கும் மக்களின் முன்னேற்றத்திற்கும் ஒன்றுபட்ட சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்த அரசியல் கட்சி வேறுபாடுகளுக் கப்பால் கிராமிய ஒற்றுமையைக் கட்டிக்காக்கப் பாடுபடுவோம்.'' - எனத் தனது உரையில் குறிப்பிட்டார்.

(இ)

## தினசரி ராசி பலன்
(20.01.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள் 7 ஆம் நாள் சனிக்கிழமை திருதியை. பகல் 2.11 மணிவரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம் சதயம் பி.இ. 5.31 மணிவரை. பின்னர் பூரட்டாதி மரணயோகம். பகல் 2.11 மணிவரை. அதன்மேல் அமிர்தம். பி.இ. 5.31 மணிவரை அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *காலை 9.26 மணிமுதல் 10.54 மணிவரை*

**சுபநேரம்** - *மாலை 3.36 மணிமுதல் 5.06 மணிவரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *தை மாத வளர்பிறை சதுர்த்தசி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சதயம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

**ரிஷபம்** விருத்தியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். சுயதொழில் விருத்தி அடையும். வியாபாரத்தில் அபிவிருத்தி உண்டாகும். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**மிதுனம்** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். சுபகாரியங்கள் சுலபமாக ஒப்பேறும்.

**கடகம்** சலனம் மிகுந்த நாள்.மனக்குழப்பம் இனம்புரியாத கவலை உண்டாகும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகும். குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் போகும்.

**சிம்மம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கு அதிகமாகும். எண்ணிய காரியம் தாமதமாகும். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும்.

**கன்னி** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உத்தியோக உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் போட்ட முதலீடு நல்ல லாபம் வரும்.

**துலாம்** விருத்தியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். செய்யும் தொழில் விருத்தியடையும். வியாபாரத்தில் வெளிநாட்டு ஒப்பந்தங்கள் வருமானம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சலசலப்பு காணப்படும். தொழிலில் வெறுப்பும் கவனக்குறைவும் உண்டாகும். திருமணப் பேச்சுகள் குழப்பிய நிலையில் இருக்கும்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்று.

**மகரம்** இன்பமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய ஆடம்பரப் பொருள்களை வாங்கி மகிழ்வார்கள்.

**கும்பம்** இணக்கமான நாள் நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்ப நல்லிணக்கம் காணப்படும். வியாபாரத்தில் பணியாளர்களின் நல்ல ஒத்துழைப்பால் வருமானமீட்டுவார்கள்.

**மீனம்** துன்பமான நாள். வருமானம் நலிவடையும். குடும்பத்தில் ஒற்றுமை உணர்வு குறையும். சுயதொழிலில் அந்நியர் தலையீட்டால் வரவேண்டிய லாபம் குறைவடையும்.

**சந்திராட்டமநாள்: அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதலாம் 2 ஆம் 3 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## பொங்கல் விழாவும் கால்கோள் விழாவும்

சாவகச்சேரி, ஜன. 20

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் பொங்கல் விழாவும் கால்கோள் விழாவும் இன்று இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஒய்வு நிலைப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் கலந்துகொள்ளவுள்ளார்.

இனிய விருந்தினர்களாக பூநகரி நல்லூர் மகா வித்தியாலய அதிபர் திருமதி சூரியகுமாரி இராசேந்திரம் மற்றும் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய ஆசிரியர் செல்வி ந.பேரின்பகௌரி ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

(இ - 21)

## ஓய்வூதியர் நிதிய பொதுக்கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நல்லூர் பிரதேச சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

க.ம.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேச செயலக கணக்காய்வளர் திருமதி கலைச்செல்வி ரமணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(இ)

## நூல் வெளியீடும் ஆய்வு அரங்கும்

கலாநிதி ந.இரவீந்திரனின் நூல்கள் வெளியீடும் விமர்சன ஆய்வு அரங்கும் நாளை ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு -

யாழ். நகர் ஸ்ரான்லி வீதி,எஸ்.டி.பி. வங்கிக் கட்டட மேல்மாடி மண்டபத்தில் வை.வன்னியசிங்கம் தலைமையில் இடம் பெறும்.

உழைப்பு மொழி கல்வி, சாதியமும் சமூக மாற்றமும் மற்றும் விமர்சன ஆய்வு நூலான சாதிச் சமூக வரலாற்றில் வர்க்கப் போராட்டம் ஆகியவையே வெளியிட்டு வைக்கப்பட உள்ளன.

அகிலன் கதிர்காமர் (விமர்சகர்), சி.வன்னியகுலம் ஓய்வுநிலைப் பணிப்பாளர் - ரூபவாகினி), ஆசிரியர் சி. ரமேஸ் ஆகியோர் ஆய்வுரை ஆற்றுவர்.

(இ)

## இன்றும் நாளையும் மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக -

**ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக இன்று சனி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில்** -

நாவாந்துறை, பொம்மைவெளி, சூரியவெளி, சோனகதெரு, அராலி வீதி, செழியன் வீதி ஆகிய இடங்களிலும் -

நாளை ஞாயிறு காலை 8.30 மணியில் இருந்து மாலை 6 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** -

தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, ரயில் நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ். 2 ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குத் தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் ரயில் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படிச் சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக் கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ். ரயில் நிலையம், Green Grass விடுதி, சிறி நதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ் ஆகிய இடங்களிலும் -

**கிளிநொச்சி பிரதேசத்தில்** -

கள்ளப்பாடு, சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், ஆனையிறவு உப்பளம், ஆனையிறவு ரயில் நிலையம், இயக்கச்சி 12th VIR இராணுவ முகாம், இரணைமடு, விசேட அதிரடிப்படை தலைமை இராணுவ முகாம், கள்ளப்பாடு மீன்பிடி சமாசம் ஆகிய இடங்களிலும் -

மின் தடைப்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## பிணைமுறி விவகாரத்தால் அரசில் தளம்பல்நிலை;

# கடும் போக்கை கைக்கொள்வாரா ஜனாதிபதி மைத்திரி?

இலங்கையின் சமகால அரசியல் நிலையில் என்ன நடக்கின்றது என அனைவரும் உற்றுநோக்கும் வகையில்நாட்டின் அரசியல் களம் ஒரு தளம்பல் நிலையில் சென்று கொண்டிருக்கின்றது. அரசுக்குள் நிலவும் உட்பூசல்களும், கருத்து வேற்றுமைகளும், தலைமைப்பீடங்களில் நிலவும் சில முரண்பாடுகளுமே இதற்குக் காரணம்.

கடந்த 3ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையின் அரசியல் களம் ஒரு சுமுகமான நிலையிலேயே சென்றுக் கொண்டிருந்தது, அதாவது, பிணைமுறி மோசடி தொடர்பாக ஜனாதிபதி தனது அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னரான காலப்பகுதி!

இந்நிலையில், அந்த அறிக்கையில் அதிகளவில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு ஜனாதிபதியால் எச்சரிக்கை விடப்பட்டிருந்ததும், அதில் மிக முக்கியமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமையே இன்றைய அரசியல் தளம்பல் நிலைக்கு வித்திட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் ஆட்சி அமைத்திருந்தாலும் கூட, ஜனாதிபதியின் அறிக்கையின் பின்னர் கூட்டரசாங்கத்திலும், அரச அங்கத்தவர்களிடையேயும் புரிந்துணர்வு அற்ற நிலை காணப்படுகின்றமையை நாட்டின் மக்கள் சமகாலத்தில் உணர்ந்துள்ளனர்.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பகிரங்கமாக மக்கள் மத்தியில் தற்போது தமது பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றமை அரசாங்கத்தில் நிலவும் பிரச்சினைகளை மக்களுக்குப் புடம்போட்டுக் காட்டுவதாய் அமைந்துள்ளது. அதே சமயம் இது கூட்டு எதிரணியினருக்கும் தங்களது தரப்பை வலுப்படுத்தும் சந்தர்ப்பமாய் அமைந்துள்ளதுடன், மஹிந்தவின் தேவையையும் மக்கள் உணர்கின்றார்கள் என்ற நிலைப்பாட்டையும் அரசாங்கத்தின் குழப்ப நிலைகள் உணர்த்துகின்றன.



இந்த நிலையில் தான் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியேறியிருந்தமை அரசின் தளம்பல் நிலையை சுட்டிக்காட்டுவதாய் அமைந்துள்ளது. அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை சாடுவதும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சார்ந்தவர்கள் ஐக்கிய தேசிய கட்சியை சாடுவதும் கூட அதிகரித்துவிட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே மைத்திரிக்கு எதிரான குரல்களும் மேலோங்க ஆரம்பித்து விட்டன, உதாரணமாக அண்மைக்காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் மக்களுடனான பொதுக்கூட்டங்களில் மைத்திரியை பகிரங்கமாக விமர்சித்து வருகின்றனர்.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான மரிக்கார், சமிந்த ஆகியோர் ஜனாதிபதியைப் பகிரங்கமாகவே விமர்சித்து உரையாற்றி வருகின்றனர். அதைவிட, கடந்த 10ஆம் திகதி பிணைமுறி மோசடி தொடர்பாக விவாதிக்கும் விசேட நாடாளுமன்ற அமர்வில் ஏற்பட்ட குழப்பநிலையும், அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் யார் திருடன் என கூச்சலிட்டதும் கூட, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளவர்களிடையே விமர்சனத்தை தோற்றுவித்திருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட ஜனாதிபதி மைத்திரிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பதை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அந்த யார் திருடன் என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சாடுவதாய் அமைந்திருந்த கூற்று உணர்த்துகின்றது.

இந்நிலையில், அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநடப்பு செய்திருந்தமை தென்னிலங்கை அரசியல் அவதானிகளிடையே பல்வேறு சர்ச்சைக்களை ஏற்படுத்தியுள்ளது.

மைத்திரியின் அடுத்தக்கட்ட நடவடிக்கை எவ்வாறானதாக இருக்கும், அது இலங்கை அரசியலில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவிக்குமா என்ற நிலை இதன் காரணமாகத் தோற்றம் பெற்றுள்ளது. மேலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கு எதிரான அரசியல் காய் நகர்த்தல்களும் வலுப்பெறுகின்றன, தற்போது பிரதமருக்கு எதிரான கூட்டு எதிர்க் கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாராகியுள்ளமை அதற்குச் சான்று.

ஆட்சியில் இருக்கக்கூடிய ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் எதிராக தற்போது அதிகபடியான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றனஎனக்கூடக்கூறலாம், இலகுவாய் கூறுவதென்றால், பிணை முறி தொடர்பான ஜனாதிபதியின் அறிக்கை அவருக்கே தற்போது தலையிடியாக அமைந்துள்ளது.

**சந்திரிகாவுடனும் முறுகல்**

இவ்வாறான அழுத்தங்களின் மூலம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஒரு வலுவான முறுகல் நிலை தோன்றும் பட்சத்தில் அதன் விளைவு எவ்வாறு இருக்கும் என்பதோடு, கூட்டரசாங்கத்தின் ஆயுள் தொடர்பிலும் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. இதே போன்ற ஒரு சூழ்நிலை கடந்த 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றதை இத்தருணத்தில் சுட்டிக் காட்டலாம், கடந்த 2002ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையில் இவ்வாறான ஒரு முறுகல் நிலையே ஏற்பட்டது.

2002ஆம் ஆண்டில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு அற்ற நிலையின் காரணமாக அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அதிரடியாக செயற்பட்டு அப்போதைய பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு ஆகியவற்றை கைப்பற்றிக் கொண்டார். அப்போதைய அமைச்சரவையில் இருந்த ஜோன் அமரதுங்க, திலக் மாரப்பன ஆகியோரது பதவிகள் இதன்போது பறிபோயின. அத்துடன் 3 மாத காலத்திற்கு நாடாளுமன்றத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஒத்தி வைத்து, அந்த 3 மாத காலப்பகுதி நிறைவடைந்த பின்னர் அதிரடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்தார். இது போன்ற ஒரு முறுகல் நிலையே தற்போதும் நிலவுவதால் அன்றைய ஜனாதிபதி சந்திரி காவைப்போல மைத்திரியும் செயற்படுவாரா என்பதே தற்போதைய கேள்வி!

அவ்வாறான அபாயகரமான சூழ் நிலை உருவாகுமா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினர் அழுத் தங்களின் மூலமாக மைத்திரியை அந்நிலைக்கு உட்படுத்திவிடுவரா என்ற ஐயப் பாடும் நிலவுகின்றது. மேலும், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், ஜனாதிபதி சம்பந்தமாக விமர்சனங்களை முன்வைப்பதில்லை என முடிவு செய்திருந்த அதேசமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் வெளியிடும் கருத்துக்கள் சம்பந்தமாக அவர்களை இலக்கு வைத்துப் பதிலளிக்க வேண்டுமே தவிர ஜனாதிபதியை இலக்கு வைக்கக் கூடாது என்ற தீர்மானத்தை செயற் குழு எடுத்திருந்தது.

ஐ.தே.கவின் முடிவிற்கமைய ஜனாதிபதியை அவர்கள் சீண்டாமல் இருப்பார்களா? முடிவில் மாற்றங் கள் ஏற்படுமா? இந்தநிலை இன்னும்எத்தனை நாள் களுக்குத் தொடரும் என்ற எதிர்பார்ப்பே தற்போது தென்னிலங்கை அரசியல் குறித்து நிலவுகின்றது.

மேலும், மைத்திரியை ஐ.தே.கவினர் சீண்டாமல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரை இலக்கு வைத்து செயற்படுவார்கள் எனில், சுதந்திரக்கட்சி யின் தலைமைத்துவத்தில் இருக்கும் மைத்திரி அதற்கு எவ்வாறு பதில் அளிக்கப் போகின்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் மீது ஐ. தே.கவினர் வலுவான அழுத்தங்கள் கொடுப்பார்களானால் மைத்திரி கூட்டர சாங்கத்தின் ஜனாதிபதி என்ற நடு நிலையுடன் செயற்படுவாரா? இல்லை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலை வர் என்ற ரீதியில் செயற்படுவாரா? என்ற ஐயப்பாடும் நிலவுகின்றது. எது எப்படியாயினும், ஐ.தே.க தொடர்பில் மைத்திரியின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?

இதுவே தென்னிலங்கை அரசியல் அவதானிகளினதும், நாட்டு மக்களினதும் எதிர்பார்ப்பு!!

**- ஜெஸ்லின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

**வெளியுறவு அமைச்சர் காப்ரியேலும் அவரது ஐரோப்பிய சமபலங்களும் ஐரோப்பிய இராணுவ ஒன்றியத்தின் அபிவிருத்தி உத்தியோகபூர்வமாகத் தொடங்கப்படுவதை அறிவித்தன. அவை 'நிரந்தரக் கட்டமைப்புக் கூட்டுறவு' (PESCO) என்பதன் பாகமாக முதலில் 17 திட்டங்களுக்கு உடன்பட்டன. இது ஐரோப்பிய நாடுகளின் ஆயுதப் படைகளது கட்டமைப்பை ஐக்கியப்படுத்தும். ஜேர்மன் இராணுவம் நான்கு திட்டங்களுக்குத் தலைமை ஏற்கும்.**

ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா, மத்தியதரைக் கடல் மற்றும் மாலி ஆகிய ஐந்து வெளிநாட்டுத் தலையீடுகளை மூன்று மாதங்களுக்கு நீடிக்க அண்மையில் ஜேர்மன் நாடாளுமன்றம் பெரும்பான்மையோடு ஒப்புதல் வழங்கியது. CDU, SCU, SPD மற்றும் சுதந்திர ஜனநாயகக் கட்சி இந்த ஐந்து திட்டங்களுக்கும் ஒப்புதல் வாக்களித்தன. அதேவேளையில் பசுமைக் கட்சி மற்றும் அதிவலது கட்சியான ஜேர்மனிக்கான மாற்றீடு அவற்றில் சிலவற்றை மட்டும் ஆதரித்தன. முடிவுகள் அதன் வாக்குகளைச் சார்ந்து இல்லை எனும் போது எப்போதும் செய்வதைப் போல, இடது கட்சி அத்திட்டங்கள் அனைத்திற்கும் எதிராக வாக்களித்தது.

ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சி (SGP) மட்டுமே இந்த சூழ்ச்சிகளை எதிர்த்து வரும் ஒரே அரசியல் சக்தியாகும். ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சி புதிய தேர்தல்களுக்கு அழைப்புவிடுக்கின்றது. அத்தோடு, போர் மற்றும் முதலாளித்துவத்திற்கு எதிராகத் திரும்பிய ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டுவதற்காகப் போராடுகிறது.

**ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டில் இராணுவவாதமும் அகதிகள் மீதான ஒடுக்குமுறையும்**

புரூசெல்ஸில் அண்மையில் தொடங்கி, நடந்து முடிந்த ஆண்டின் (2017) ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு, அரசுகளது அணிசேர்க்கைக்கு அடையாளப்படுத்தலாக உள்ளது. சமூக மற்றும் தேசிய முரண்பாடுகளால் பிளவுபடுத்தப்பட்டும் அரசியல் பதற்றங்களால் முடக்கப்பட்டும் உள்ள இந்த 28 நாடுகளது அரசு தலைவர்கள், இராணுவவாதத்தைப் பெருமளவில் தீவிரப்படுத்துவது என்ற ஒரே ஒரு விடயத்தில் உடன்படுகின்றனர்.

ஐரோப்பிய இராணுவ ஒன்றியம் வேகமாக முன்நகர்த்தப்பட்ட அளவுக்கு சமீபத்திய மாதங்களில் இந்தளவுக்கு வேகமாக வேறெந்தப் பிரதான அரசியல் திட்டமும் முன்நகர்த்தப்பட்டிருக்கவில்லை. அண்மையில், அதில் பங்குபெற்ற 25 நாடுகளது வெளியுறவுத்துறை அமைச்சர்கள், நிரந்தர கட்டமைப்புக்கான கூட்டுறவின் (Permanent Structured Cooperation Pesco) கீழ் முதல் 17 திட்டங்களை முன்னெடுக்க ஒப்புதல் வழங்கினர். நீண்டகால அடிப்படையில் அமெரிக்காவிடமிருந்து அதிக சுதந்திரமான ஐரோப்பிய ஒன்றியத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். அந்த உச்சி மாநாட்டில் Pesco புகழ்ந்து பாராட்டப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய கவுன்ஸில் தலைவர் டொனால்ட் டஸ்க், உச்சி மாநாட்டுக்கான அவரது வரவேற்புரையில், 'கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ஒற்றுமை பேணுவது சாத்தியமே என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு' என்பதாக Pesco ஐ வர்ணித்தார். அவர் எழுதினார், '25 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் - அனைத்து ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் சம்மதத்துடன், தற்போதைய உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு உட்பட்டு - ஒரு புதிய துறையில் கூட்டுறவைத் தொடங்குகின்றன. நடைமுறையில் ஒற்றுமைக்கான இந்த எடுத்துக்காட்டு நம் எல்லோருக்கும் ஒரு தூண்டுதலாக இருக்கவேண்டும். நம்பத் தகுந்த வகையில் ஏனைய முக்கிய முடிவுகளுக்கும் இதுவொரு நல்ல அறிகுறியாக இருக்கிறது.' - என்றார்.







உண்மையில், அந்த உச்சி மாநாட்டில் பங்கெடுத்தவர்கள் தோற்றப்பாட்டளவில் மற்ற ஒவ்வொரு பிரச்சினைகள் மீதும் பிளவுபட்டுள்ளன. இது, உச்சி மாநாட்டின் திட்டநிரலில் இருந்த இரண்டாவது தலைப்பான, அகதிகள் கொள்கைக்கும் பொருந்துகிறது.

**அனைத்து ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளும் கண்டத்தை அடைக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கின்றமை மீது உடன்படுகின்றன. இது வரையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐரோப்பிய ஒன்றியம் பால்கன் பாதையை அடைத்து, துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகனுடன் ஓர் அருவருக்கத்தக்க உடன்படிக்கைக்குள் நுழைந்தது. அவர் பணத்திற்கு கைம்மாறாக எந்தவோர் அகதிகளும் ஏகியன் கடன் வழியாக கிரீஸை அடைய முடியாமல் இருக்கின்றமையை உறுதிப்படுத்துகிறார்.**

லிபியாவில், இத்தாலியும் ஐரோப்பிய ஒன்றியமும் கடல் ரோந்துப்படை எனப்படுவதையும் மற்றும் பிற போராளிகள் குழுக்களையும் ஆயுதமயப்படுத்தி வருகின்றன. இவை அகதிகள் மத்திய தரைக்கடலைக் கடந்து பயணிப்பதிலிருந்து அவர்களைப் பலவந்தமாகத் தடுத்து, கைது செய்து, சித்திரவதை செய்கின்றன. சில சமயங்களில் அவர்களை அவை அடிமைகளாக விற்கின்றன. இந்தச் சக்திகள், இஸ்லாமியவாதிகள் மற்றும் கடத்தல் குழுக்கள் உட்பட, உள்நாட்டுப் போரின் முன்னாள் போராளி குழுக்களில் இருந்து ஆள்களை நியமித்துள்ளது.

இந்தக் குற்றகரமான கொள்கை இன்றியமையாத ரீதியில் சவாலுக்கிடமின்றி இருக்கின்ற நிலையில், அங்கே அகதிகளை ஏற்பதில் ஐரோப்பிய அங்கத்துவ நாடுகளுக்கிடையே கடுமையான விவாதங்கள் உள்ளன. 2015இல், கிரீஸ் மற்றும் இத்தாலியை வந்தடைந்த அகதிகளில் சிலரை ஒரு கட்டாய கடமைப்பாட்டுக்கு உட்பட்ட பங்கீட்டு முறையின்படி பிற ஐரோப்பிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதெனப் பெரும்பான்மையுடன் ஐரோப்பிய ஒன்றியம் முடிவெடுத்தது. இந்த முடிவு பெரிதும் செயற்படுத்தப்படவில்லை. போலந்து, செக் குடியரசு மற்றும் ஹங்கேரி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எந்தவோர் அகதிகளையும் ஏற்றுக் கொள்ள இந்நாள் வரையில் தொடர்ந்து மறுத்து வருகின்றன.

போலந்தில் இருந்து வந்துள்ள டஸ்க், இதனால் தான், உச்சி மாநாட்டுக்கு சமர்ப்பித்த அவருடைய ஆவணத்தில், பங்கீட்டு முறை பிளவுகளை உருவாக்குவதுடன் நடைமுறைக்கு உதவாதவையாக நிரூபணமாகி உள்ளதால் அவற்றைக் கைவிட வேண்டுமென முன்மொழிந்தார். இது கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தது.

டஸ்கின் கருத்துடன் உடன்பாடு இல்லை என்றும், அகதிகளைப் பகிர்ந்துகொள்வது தவிர்க்கவியலாதது என்றும் ஜேர்மன் அரசு குறிப்பிட்டது. ஐரோப்பிய ஆணைக்குழுவின் துணைத் தலைவர், பிரான்ஸ் ரிம்மர்மான்ஸ் கூறுகையில், 'புலம்பெயர்வு மீதான சவாலுக்கு நாம் ஒரு ஐரோப்பிய தீர்வைக் காணவேண்டும்.



இல்லையென்றால் அங்கே எந்தத் தீர்வும் இருக்காது' என்றார். ஒவ்வோர் அங்கத்துவ நாடும் அதன் பங்கிற்கு செயற்பட வேண்டுமென அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

(கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



**தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தாக்குதல் போராட்டம் (06.06.1992)**



# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 72

### கம்ப களஞ்சியம் வெளியீடு

கழகத்தின் நூலாக்க முயற்சியும் இந்த ஆண்டே கைகூடியது. ‘கம்ப களஞ்சியம்’ எனும் தொகுப்பு நூல் விழாவின் முதல் நாளில் மலர்ந்தது. யாழ்ப்பாணத்தில் சம காலத்தில் சிறந்து விளங்கிய, கவிஞர்களையும் அறிஞர்களையும் இணைத்து இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்த எமது கழகம், எதிர்காலத்தில் ஏற்றம் பெறத்தக்க இளந் தலைமுறையை இத்துறைகளில் இனங்காணும் முகமாக முதன்முதல் கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகளை இவ்விழாவிலிருந்து நடத்தத்தொடங்கியது. கவிதைப்போட்டிக்கு வித்துவான் சி.ஆறுமுகம் அவர்களின் பெயரும், பேச்சுப் போட்டிக்கு யாழ்ப்பாணம் தேவன் அவர்களின் பெயரும் இடப்பட்டன. போட்டி இணைப்பாளராக ஆறு.திருமுருகன் நியமிக்கப்பட்டான். நாமே எதிர்பாரா வகையில் இளைஞர்கள் பெருந்தொகையினராய் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர். பின்னாளில் எமது கழகத்திற்குத்தலைவராயான சிவசங்கரும் பொருளாளராயான த.ஜெயசீலனும் இக்கவிதைப் போட்டிகளிலேயே எம்மால் இனங்காணப்பட்டனர்.

பின்னாளில் கவிஞர்களாய் இவர்கள் ஈழத்து இலக்கியவுலகில் பெயர் பதித்தனர். இவ்விழாவில் நாத்திகக் கொள்கையுடைய கம்பனை மறுக்கின்ற பொன்.கணேசமூர்த்தி என்பவர் முதன்முதலாகக் கலந்து கொண்டார். அவரும் நானும் செய்த வழக்காடு மன்றத்தில் அவரது வாதம் மிகச் சிறப்பாயிருந்தது. என்னைப் பேச விடாது திக்குமுக்காட வைத்தார். இவ்விழாவில் குழந்தை சண்முகலிங்கம் தலைமையில் அறிஞர் பலரும் கலந்துகொண்ட நாடக அரங்கம் நிகழ்ச்சியும் நிகழ்ந்தது. இவ்விழாவிற் கலந்துகொண்ட பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட்ட பேராசிரியர் அனைவரையும் அவர்களது பட்டமளிப்பு அங்கிகளோடு விழாவில் கலந்துகொள்ளச் செய்தோம். அடுத்த விழாவில் பல்கலைக்கழகத்தார் சிலர் பேராசிரியர்கள் தமது பட்டமளிப்பு அங்கியை, வெளிவிழாக்களுக்குப் போட்டுச் செல்வது மரபில்லை என, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அடுத்த விழாக்களில் பேராசிரியர்களை அங்ஙனம் வரவிடாமல் செய்தனர். அது அங்கிருந்த ஒரு சிலரின் அழுக்காறால்விளைந்தசெயல்.நாங்கள்கொழும்பு வந்த பிறகான இன்றைய நிலையில் பாடசாலை நிகழ்ச்சிகளுக்குக் கூட.பேராசிரியர்கள் பட்டமளிப்பு அங்கியுடன் சென்று வருவதைப் பத்திரிகைகளில் கண்டு எனக்குள் சிரித்துக் கொள்வேன். ‘தமக்கென ஒன்றில்லாதார்’

★ ★ ★

### கவிஞர் சோ.பவோடு முரண்பட்டோம்

இவ்விழாவின்போது சிறுசிறு பிரச்சினைகள் ஆரம்பித்தன. கவிஞர் சோ.ப. எமது கழகத்தாற்றான் அதிக பிரசித்தம் பெற்றிருந்தார். தனிப்பட்ட வாழ்விலும் அவருக்கு கழகம் பெருந்துணை செய்திருந்தது. பொன். சுந்தரலிங்கம் அவர்களை அவருக்கு நான் தான் அறிமுகம் செய்து வைத்தேன். நல்லதோர் அறிஞர் என்ற காரணத்தால் சோ.பவிற்கு நான் எப்போதும் அதிகம் மதிப்பளிப்பேன். அம்மதிப்பினால் நான் பணிந்து நடந்ததை, சோ.ப. விளங்கிக்கொள்ளவில்லை. சுந்தரலிங்கம் அவரை ஓர் அறிஞராய் அன்றி, சாதாரண ஒருவராய்க் கருதியே பழகினார். அந்த அலட்சியப் போக்கிற்கு சோ.ப. நிறைய மதிப்பளித்தார். இளங்கலைஞர் மன்ற விழாவிற்கு சைக்கிளில் ஓடிப் பாடுபட்ட அவர், கம்பன் விழாவின் கவியரங்கத்தன்று நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பாக நிகழ்ச்சிக்கு வரத் தனக்குக் கார் அனுப்ப வேண்டும் என, நிபந்தனை விதித்து, சொல்லி அனுப்பினார். அதனால் நான் கடுங்கோபம் கொண்டேன். அக்காலத்தில் சொற்பொழிவுக்கு நான் காரில் செல்வது தான் வழக்கம்."அவர் மட்டும் நிகழ்ச்சிக்குப் போக கார் கேட்கிறார். எங்களுக்கும் கார் அனுப்பினால் என்ன?" என்று சோ.ப. சொன்னதாக அறிந்தேன். தங்களுக்கு கிடைக்காத சலுகைகளை மக்கள் எனக்கு வழங்கியது பற்றி, சில தமிழ் அறிஞர்கள் என்மேல் பகை கொண்டிருந்தார்கள். சோ.ப. வேறெந்த நிகழ்ச்சிக்கும் கார் அனுப்பும் படி கேட்டுக்கொண்டதாய் நான் அறியேன். எங்களோடு பகைப்பதற்காகவே அங்ஙனம் அவர் கேட்டனுப்பினார். சோ.பவின் மேல மதிப்புக்கொண்டிருந்த சிவலிங்கராஜாவும், செய்திகொண்டுவந்த சிறிகணேசனும், “சண்டை வேண்டாம் அவருக்கு ஒரு காரை அனுப்பிவிடுவோம்” என எனக்கு ஆலோசனை கூறினர். எனது கோபம் கண்டு சிவலிங்கராஜா தானே ஒரு காரை அனுப்பவும் முன்வந்தார். அவர்களது கோரிக்கைகளை ஏற்க மறுத்து, சோ.பவின் நிபந்தனையை நிராகரித்தேன். அதனால் கவியரங்கத்திற்கு சோ.ப. அன்று வரவில்லை. பின்னர் பலரும் அவருக்கு என்ன சொன்னார்களோ தெரியவில்லை. தனது ஆளுமை காட்டக்கூடிய கவியரங்கத்திற்கு வராத அவர், அடுத்த நாள் நடைபெற்ற நாடக அரங்கிற்கு, வலிய சைக்கிளில் வந்து கலந்துகொண்டார்.

★ ★ ★

### கவிஞர் நாவண்ணனின் தியாகம்

அக்காலத்தில் சிலரின் தூண்டுதலால், விடுதலைப் புலிகள் இயக்கம் கழக நிகழ்ச்சிகளைப் பகிஷ்கரித்தது. புதுவை கூட, இவ்விழா நிகழ்ச்சிகளில் பங்கு பெறவில்லை. இவ்விழாவின் ஓரிரு நாட்களின் முன்னர்தான், கவிஞர் நாவண்ணனின் மகள் தற்கொலை செய்து இறந்து போனாள். அத்துயரையும் தாங்கிக்கொண்டு கவியரங்கத்திற்கு வர, நாவண்ணன் சம்மதித்தார். கம்பன் கழகத்துக் கவியரங்க நிகழ்ச்சியில் அவர் அவ்வளவு மதிப்பு வைத்திருந்தார். சோ.பவிற்கு, கார் அனுப்பாத நான், நாவண்ணனிற்கு அவர் கேட்காமலே கார் அனுப்பி, கவியரங்கத்திற்கு வரவழைத்தேன். அன்று தனது துயரைப் பொறுத்துக் கொண்டு, மற்றவர்களைச் சிரிக்க வைத்து நாவண்ணன் கவிதை பாடியதை மறக்க முடியாது.

★ ★ ★

### ஸ்ரீ. பிரசாந்தன்

1992 இல் கம்பன் கழகத்தில் இணைந்தவன் இவன். யாழ். இந்துக் கல்லூரியில் நடந்த ஒரு பேச்சுப் போட்டியில், இவன் பேசியதை அனைவரும் பாராட்டிச் சொல்ல, இவனைக் கழக நிகழ்ச்சியில் மேடையேற்றினோம். அற்புதமாய்ப் பேசி, மேடையிலேயே பேராசிரியர் நந்தியால், ‘குட்டி ஜெயராஜ்’ எனப் பாராட்டுப் பெற்றான். பின் கழகத்தில் முழுமையாய்க் கரைந்தான். க.பொ.த. உயர்தரத்தில் கணித மாணவனாய் இணைந்து, முதற் தவணையில் சிறந்த புள்ளிகள் பெற்றிருந்தும், பிடிவாதமாய் வீட்டிலும், கல்லூரியிலும் போராடி, இந்துக் கல்லூரியில் கலை மாணவனாய் தன் பயணத்தைத் தொடர்ந்தான். அங்ஙனம் இவன் செய்யாதிருந்தால் இன்று இவன் ஓர் எஞ்ஜினியராய் இருந்திருப்பான். பணிவு, அன்பு, விசுவாசம் என்பவை இவனுக்கு இயல்பாய் வாய்த்திருந்தன. கொஞ்சம் கொஞ்சமாகக் கழகத்தின் முழு விசுவாசியானான். 1995 இல் இவனைக் கழகத்தின் புதிய அமைப்பாளராய் ஆக்கினோம். கழகத்தில் இணைந்த பின்பு முழுமையாய் அதற்காகப் பாடுபட்டவன் இவன். இவனது தாய் வழிப்பேரன் கோப்பாயில் புகழ் பெற்ற மனிதராய்த் திகழ்ந்தார். இவனது முன்னோர் மலேசியாவிலும், இலங்கையிலும் பல கல்வி நிறுவனங்களை ஸ்தாபித்தவர்கள். பின்னர் ஏ.எல். பரீட்சையில் வடமாகாணத்தில் கலைப் பகுதியில் முதல் மாணாக்கனாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டான். கழகத்தில் இணைந்த பிறகு எனது பிள்ளையாகவே இயங்கி வருகிறான்.

எல்லோரோடும் இனிய வார்த்தை பேசி அன்பு செய்பவன். எல்லோர்க்கும் உண்மையாய் நடக்க நினைப்பவன். ஆழ்ந்த அறிவுப் பார்வை உடையவன். தனக்குக் கிடைத்த பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பைத் தனது நண்பன் மணிமாறனுக்காய் விட்டுக்கொடுக்க நினைத்தான். அப்போது இவனை நான்தான் தடுத்தாட்கொண்டேன். அதனால் மணிமாறனுக்கு இப்போதும் என் மேல் கோபம். எங்களால் பல பாதிப்புக்கள் தனிவாழ்வில் ஏற்பட்டபோதும் கழகத்தின் மேலும், என்மேலும் என்றும் உண்மை அன்பு செய்தான். பின்நாளில் எஸ்.எல்.ஏ.எஸ். பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டான். அதன் பின்னர் நடைபெற்ற எஸ்.எல்.ஈ.எஸ். பரீட்சையில், இலங்கையில் முதல் மாணவனாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டான். அரச அதிபர், அமைச்சின் செயலாளர் போன்ற பதவிகள் கிடைக்கும் வாய்ப்பிருந்தும் பல்கலைக்கழகப்பதவி நிரந்தரம் இல்லாதிருந்த வேளையில் கூட, தமிழ் கற்பிக்கும் ஆசையில் அவற்றைத் துறந்தான். அத்தகு ஆர்வம்மிகு மாணவனை பல்கலைக்கழக தமிழ்த் துறைகள் தவமாய்க் கருதி ஈர்க்காமல் தள்ளி வைத்திருந்தன. இன்று இந்தியா சென்று கலாநிதிப் பட்டம் பெற்று வந்து விட்டான். கழகத்தில் ரகுபரனுக்குப் பின்னர், கழக நூல் முயற்சிகள் அனைத்தையும் முன்னெடுத்தவன் இவனே. பேச்சாளன், நல்ல கவிஞன். எல்லோராலும் விரும்பப்படுபவன். 2010 இவனுக்குத் திருமணம் நடந்து இன்று, இரு குழந்தைகளுக்குத் தந்தையாகியிருக்கிறான். அறிவுலக விடயங்களில் இவனோடு ஆலோசிக்காமல் நான் எதையும் செய்வதில்லை. தனக்குப் பிடிக்காவிட்டாலும் வெளிப்படையாய் என் கருத்தோடு முரண்படமாட்டான். முகக்குறிப்பால் இவன் முரண்பாட்டை அறிவேன். வித்துவான் வேலனுக்கும், எனக்குமான உறவும் இங்ஙனம் தான் இருந்தது. என்னைத் தனது ஆதர்ஷ வழிகாட்டியாய் ஏற்றுக்கொண்டவன். எந்த முக்கிய முடிவையும் என்னோடு ஆலோசிக்காமல் எடுக்கமாட்டான். மனக்கட்டுப்பாட்டிலும், ஒழுக்கத்திலும் உயர்ந்து நிற்பவன். எனக்குப் பிள்ளைபோல் ஆனவன் அல்லன். பிள்ளையே ஆனவன். அளவுக்கதிகமான இவனது சாத்வீக இயல்பு, சிலவேளை எனக்கு எரிச்சல் தருவதுண்டு. இளமையில் இருந்த இவனது அறிவு வேகம், இப்போது குறைவுபடுவதாய்த் தெரிவதால் கவலையோடிருக்கிறேன். பல்கலைக்கழகப் பதவியும், பட்டமும் இவனிடமும் பொய்மையை வளர்த்து விடுமோ எனும் அச்சம் என் உள்ளத்துள் துளிர்க்கத் தொடங்கியிருக்கிறது. உலகியல் சாதுரியத்தில் மிகப் பலவீனனாய் இருக்கிறான். தனி உறவுகளைப் பேணும் அளவு, சமூகத் தொடர்பைப் பேணாதது இவனது குறை. கல்வி முயற்சிகளிலும், அறிவுத் தேடலிலும், அவற்றின் வெளிப்பாடுகளிலும் இவன் இன்னும் வேகப்பட வேண்டும் என்பது என் கருத்து. பட்டம் பதவிகளை நோக்கிய பொய்மைப் பாராட்டுகளால், நம் சமூகம் இவனைப் பலவீனப்படுத்தப் பார்க்கிறது. அதற்கு இவனும் பலியாகிவிடுவானோ என அஞ்சி நிற்கிறேன். ‘கழகத்தில் எனக்குப் பின் இவனே’ என்ற சமுதாயத்தின் எதிர்பார்ப்பை, இவன் பூர்த்தி செய்வானா? - தெரியவில்லை. பாலமை தவிர்த்துத் தேவையான இடங்களில் ரௌத்திரம் பயின்று, ஆளுமையைத் திறம் பட வளர்த்துக்கொண்டு, தன்னைத்தான் முழுமையாய்த் தெரிந்துகொள்வானானால், இவனால் அறிவுலகும், நம் சமூகமும் பெரும் பயன்பெறும். “சாதனை செய்க பராசக்தி” எனது சாத்வீக குண விம்பமாய் இவனைச் சொல்லலாம்.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# 35 வருடங்களின் பின் கச்சாயில் களை கட்டிய பொங்கல் விழா







தென்மராட்சி கச்சாய் பிரதேசத்தில் இம்முறை பொங்கல் விழா 35 வருடங்களின்பின்சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

கச்சாய் வினோபா சனசமூக இளைஞர்களின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் ஊர் இளைஞர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டன.

இவ்விழாவில் தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான தாச்சிப்போட்டி, உறியடித்தல், தலையணைச்சண்டை, கிறீஸ் மரம் ஏறுதல், சாப்பாட்டுப் போட்டி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டன.

இதில் இறுதி நிகழ்ச்சியாக கர பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இடம்பெற்றன. நொக்கவுட் முறையில் இடம்பெற்ற இப் போட்டியில் அல்லாரை டெல்ரா-A அணி முதல் இடத்தையும் வொலிகிங்ஸ் இடண்டாம் இடத்தையும் டெல்ரா-B அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

பிரதம விருந்தினர்களாக மூத்த சனசமூக நிலைய உறுப்பினர்களான வைரமுத்து சிவலிங்கம், வே.வேலாயுதம் ஆகியோர் உட்பட கிராம மக்கள் பலர் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-ப)




யாழ். ஒஸ்மானியக் கல்லூரியில் நடைபெற்ற கால்கோள் விழாவில் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்ப பிரிவு) பத்மநாதன் சசிக்குமார் வருகை தந்து பரிசில்களை வழங்கினார் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் படங்களில் இடம்பெற்றன. (இ-19)




யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஞாயிறன்று பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் எஸ்.பாலசந்திரனும் இந்த விழாவில் கலந்து கொண்டார். (இ-19)

# மகளிர் கமக்கார அமைப்பின் புதிய உறுப்பினர்கள் தெரிவு



சாவகச்சேரி, ஜன.20

சாவகச்சேரி, சரசாலை வடக்கு மகளிர் கமக்கார அமைப்பின் புதிய ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு சரசாலை நித்திலா மகளிர் சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

புதிய நிர்வாக சபை தலைவராக திருமதி சி.விமலேஸ்வரியும், செயலாளராக திருமதி சி.காந்திமதியும், பொருளாளராக திருமதி ச.மங்களேஸ்வரியும் உப தலைவராக உ.புஸ்பவாணியும், உப.செயலாளராக க.ஜெகதீஸ்வரியும் நிர்வாக உறுப்பினர்களாக வி.சிவரஞ்சினியும், த.பிரபாநிதியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் மீசாலை கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.


புதிய நிர்வாக சபையின் உறுப்பினர்கள் சரசாலை நித்திலா மகளிர் சங்க உறுப்பினர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

அத்துடன் யாழில் இயங்கிவருகின்ற பதிவு செய்யப்பட்ட மகளிர் அமைப்புக்களில் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் கணக்கெடுப்பில் முன்னணியில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-21)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

36. அன்னாசிப்பழம் நான்கு வாங்கும் பணத்திற்கு எத்தனை அப்பிள் பழங்கள் வாங்கலாம்?
1) 10   2) 14   3) 12

37. வாகனத் தரிப்பிடம் ஒன்றிலுள்ள கார்களினதும் முச்சக்கர வண்டிகளினதும் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை நாற்பத்து ஒன்று ஆகும். அங்குள்ள கார்களின் எண்ணிக்கை யாது?
1) 6   2) 7   3) 5

38. 

இவ்வுருவினை கோட்டின் வழியே மடித்து ஒட்டிய பின் உருவாக்கிய சதுரமுகியில் எழுத்து A யிற்கு எதிர்முகத்தில் இருக்கும் ஆங்கில எழுத்து யாது?
1) C   2) E   3) F

39. பின்வரும் விழாக்கள் கொண்டாடப்படுவதைக் கால எண்ணிக்கையின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துக.

1. பொன்விழா
2. பவளவிழா
3. வெள்ளிவிழா

1) 3, 1, 2   2) 3, 2, 1   3) 1, 3, 2

40. கீழே கூடுகளுக்குள் சில நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. ஆனால் அவை சரியான ஒழுங்கில் தரப்படவில்லை. அவற்றைச் சரியான முறையில் ஒழுங்கு படுத்த அமையும் விடையின் கீழ்க் கோடிடுக.

1. தேநீரை தன் நண்பர்களுடன் சேர்ந்து அருந்தினான்.
2. கரன் நண்பர்களுடன் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றான்.
3. வெறுமையாக உள்ள ஆசனம் ஒன்றில் அமர்ந்தான்.
4. கரன் வீதியில் தன் நண்பர்களைச் சந்தித்தான்.

1) 3,2,1,4   2) 4,2,3,1   3) 4,2,1,3

# பிள்ளைகளே உங்களுக்கு 'அ' வரிப் பழமொழிகள்

- ★ அகல உழுகிறதை விட ஆழ உழு.
- ★ அகல் வட்டம் பகல் மழை.
- ★ அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
- ★ அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
- ★ அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு.
- ★ அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
- ★ அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்.
- ★ அடக்கமே பெண்ணுக்கு அழகு.
- ★ அடாது செய்தவன் படாது படுவான்.
- ★ அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்.
- ★ அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால்
- ★ அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபம்.
- ★ அணில் கொம்பிலும், ஆமை கிணற்றிலும்.
- ★ அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது.
- ★ அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.
- ★ அந்தி மழை அழுதாலும் விடாது.
- ★ அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
- ★ அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
- ★ அயலூரானுக்கு ஆற்றோரம் பயம், உள்ளூரானுக்கு மரத்திடியில் பயம்.
- ★ அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர்.
- ★ அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.
- ★ அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- ★ அழுதாலும் பிள்ளை அவளே பெற வேண்டும்.
- ★ அளக்கிற நாழி அகவிலை அறியுமா?
- ★ அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்.
- ★ அறக்கப் பறக்க பாடுபட்டாலும் படுக்க பாயில்லை.
- ★ அறச் செட்டு முழு நட்டம்.
- ★ அற்ப அறிவு அல்லற் கிடம்.
- ★ அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்.
- ★ அறமுறுக்கினால் அற்றும் போகும்.
- ★ அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்கவேண்டும்.
- ★ அறிய அறியக் கெடுவார் உண்டா?
- ★ அறிவீன இடத்தில் புத்தி கேளாதே.
- ★ அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்.
- ★ அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.






# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 6

தரம்-5   பிரபல ஆசிரியர்   பகுதி I   நேரம்- 45 நிமிடம்



- 8ம் 9ம் வினாக்களிற்கு பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.


08. 

1) 1500 ml   2) 1400 ml   3) 120 ml

09. பெரிய சதுரமுகிகளில் மூன்றும் சிறிய சதுரமுகிகளில் ஒன்றையும் கூட்டி அதில் இருந்து சிறிய சதுரமுகிகள் இரண்டைக் கழித்தால் புதிய கொள்ளளவு யாதாக இருக்கும்?
1) 2700 ml   2) 3600 ml   3) 2800 ml

10. A இல் இருந்து 150 m சென்று B ஐ அடைகிறார். B இலிருந்து 210 m தூரம் சென்று C ஐ அடைகிறார். C இலிருந்து B யினூடாக D ஐ அடைகிறார். B இற்கும் D இற்கும் இடையே உள்ள தூரம் 55 m ஆகும். A இல் இருந்து சென்ற தூரம் யாது?
1) 550 m   2) 650 m   3) 625 m

11. நுகர்வோருக்கு சில்லறை வியாபாரி போன்று மொத்த வியாபாரிக்கு
1) மக்கள்
2) உற்பத்தியாளர்
3) சந்தையில் விற்பனை செய்பவர்

12. 
இவ்வுருவில் எத்தனை முக்கோணிகள் உண்டு?
1) 15
2) 16
3) 18

13. தரப்பட்டுள்ள பாடலைக் கொண்டு விடை எழுதுக.

ஒற்றுமையாக விரல்கள் இருப்பதால்
உந்தன் கைக்கு மிகுந்த பலம்
ஒற்றுமையாக மக்கள் வாழ்வது
ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம்

இப்பாடலினூடாக வெளிப்படுத்தப்படுவது
1) விரல்களைப் பற்றி   2) ஒற்றுமையை   3) நாட்டை


14. இப்பாடலில் மக்கள் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளனர்?
1) கைக்கு   2) பலத்திற்கு   3) விரல்களுக்கு

15. கீழே தரப்பட்டுள்ள கட்டங்களின் இடைவெளியில் வரவேண்டிய எழுத்தினைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A | G | M |
| D | J | P |
| G | M | |

1) R   2) S   3) J

16. இருவரது சிறந்த நட்பை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற உவமைத்தொடர் எது?
1) நகமும் சதையும் போல   2) ஓடும் புளியம்பழமும் போல   3) கீரியும் பாம்பும் போல

17. 
இவ்வுருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?
1) 14
2) 15
3) 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. முதல் எழுத்து கரத்தில் உண்டு, மரத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து பந்தியில் உண்டு, சந்தியில் இல்லை. மூன்றாம் எழுத்து படியில் உண்டு, பழியில் இல்லை
சொல்லை எழுதுக. ..............................

19. கங்கா ஜெனியிலும் உயரமானவள். ரமி கங்காவிலும் உயரமானவள். எனவே
1) ஜெனி ரமியிலும் உயரமானவள்
2) மூவரிலும் உயரமானவள் ரமி ஆவாள்.
3) மூவரிலும் உயரமானவள் கங்கா ஆவாள்.

- ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் உள்ள எழுத்துக்களுக்குரிய எண் பெறுமானங்களை அவதானித்து வெற்றிடமாகவுள்ள இடத்தில் வரவேண்டிய எண்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

20. LONG — 4 1 3 9  KING — 6 7 3 9  LAND — 4 5 3 2  WIND — ...........
1) 8732  2) 4732  3) 4932

21. 'தித்திப்பு' என்ற சொல்லை இலக்கங்களின் மூலம் சரியாகக் கருதினால் வரும் விடை
1) 61624  2) 65653  3) 51544

22. ஒரு வரிசையில் மாணவர்கள் அணிநடைக்காக நின்று கொண்டிருந்தனர். ஒரு பக்கத்தில் கணக்கிடுகையில் நிருத்திகன் 12 வதாகவும், மறுபக்கத்தில் எண்ணும் போது 12 ஆவதாகவும் நின்றான் எனின், வரிசையில் நின்ற மாணவர் எண்ணிக்கை யாது?
1) 25  2) 23  3) 26

23.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 4 | 6 | 8 | 10 | 12 | 14 |
| 6 | 12 | 18 | | 30 | 36 |

இந்த சட்டகத்தில் எண்கோலங்களின்படி இலக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. நிறந்தீட்டப்பட்ட பெட்டியில் இருக்கவேண்டிய எண்?
1) 14  2) 16  3) 24

24. மதுஷாவுக்கு 9 வயதாக இருக்கும் போது அவனது தந்தைக்கு 47 வயதாகும். தற்போது தந்தையின் வயது 54 எனின், மதுஷாவின் தற்போதைய வயது என்ன?
1) 16  2) 38  3) 19

25. ரேகன் வெசாக் தினத்திற்காக இரு கம்பங்களுக்கிடையே 3 கொடிகள் வீதம் தொங்கவிட்டு ஒரு கட்டிடத்தை அலங்கரிக்கத் தீர்மானித்தான். கட்டிடத்தில் 6 கம்பங்கள் இருக்குமாயின் அவனுக்கு தொங்க விடுவதற்குத் தேவையான கொடிகள் எத்தனை?
1) 16  2) 18  3) 15

- கீழ்க்காணும் பெட்டியில் உருவங்களிற்கு ஒத்த இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

△ x △ x △ = 125

△ x ○ = 30

○ x ☆ = 42

26. ☆ x ○ x △  இன் விடை யாது?
1) 30  2) 37  3) 210

27. ☆ + ○ - △  வரும் விடை எது?
1) 8  2) 13  3) 65








28. தாமிரா பெண்பிள்ளை ஆவாள். அவளது அண்ணனுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். தாமிராவிற்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?
1) 2  2) 3  3) 1

29. தாமிராவிற்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
1) 3  2) 4  3) 2


- தரம் ஐந்து மாணவர் விரும்பும் பாடங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட விபரங்களை கீழுள்ள உருக்கள் மூலம் அறியலாம். தரப்பட்ட இவ்வுருவை அடிப்படையாகக் கொண்டு 30ம் 31ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




○ கணிதம்
△ தமிழ்
□ சுற்றாடல் சார் செயற்பாடு


30. மூன்று வகையான பாடங்களையும் விரும்பும் மாணவர் எண்ணிக்கை
1) 8  2) 4  3) 9

31. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதிக்குரிய சரியான விடை
1) சுற்றாடல் சார் செயற்பாடு பாடத்தை விரும்பும் அனைவரும்
2) சுற்றாடல் சார் செயற்பாடு பாடத்தை மட்டும் விரும்புபவர்கள்
3) சுற்றாடல் சார் செயற்பாடு பாடத்தை விரும்பாத மாணவர்கள்




32. 


தரப்பட்டுள்ள உருவில் EF இன் நீளம் 10 cm ஆயின் AB யின் நீளம்?
1) 6 cm  2) 5 cm  3) 4 cm

33. சதுர வடிவ கடதாசித் துண்டு ஒன்று மூலைவிட்ட மையக்கோட்டின் வழியே மடிக்கப்பட்டு மீண்டும் படத்தில் உள்ளவாறு புள்ளிக்கோட்டின் வழியே மடிக்கப்படுகிறது





மூன்றாவது படத்திலுள்ளவாறு கத்தரிக்கோலால் புள்ளிக்கோட்டின் வழியே ஒரு துண்டை வெட்டி நீக்கிய பின்பு மடிப்புக்கள் விரிக்கப்படும் போது வரும் உரு

1) 
2) 
3) 

34. விமல் தனது பண்ணையிலிருந்து ஒவ்வொரு நாளும் 35 முட்டைகள் வீதம் சேகரிப்பான். சனிக்கிழமை வரை 175 முட்டைகள் சேகரித்தான் எனின், அவன் எந்த நாளிலிருந்து முட்டைகளைச் சேகரிக்க ஆரம்பித்திருப்பான்?
1) புதன்  2) திங்கள்  3) செவ்வாய்

- கீழேயுள்ள தரவுகளை அவதானித்து 35ம் 36ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




35. கட்டத்திற்குள் தரப்பட்டுள்ளவற்றுள் விலை கூடிய பழம் எது?
1) மாம்பழம்  2) அன்னாசிப்பழம்  3) பப்பாசிப்பழம்

# விமானத்தில் வைத்துத் திருமணத்தை நடத்தி வைத்த பாப்பரசர் பிரான்சிஸ்



சிலி நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் விமானத்தில் வைத்து ஒரு திருமணத்தை நடத்தி வைத்துள்ளார்.

விமான ஊழியர் ஜோடி ஒன்று 2010ஆம் ஆண்டில் சிவில் முறைப்படி திருமணம் செய்துகொண்டுள்ளது.

உள்ளூர் தேவாலயம் நில நடுக்கத்தால் இடிந்துவிட்டதால், மதமுறைப்படி அவர்கள் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்துள்ளனர்.

சான்டியாகோவில் இருந்து வட பகுதியில் இருக்கும் இகீகே நகருக்கு விமானப் பயணம் மேற்கொள்கையில், பாப்பரசர் பிரான்சிஸ் குறுகிய மதச் சடங்கை நிறைவேற்றி அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளார்.

இந்த விமான நிறுவனத்தின் தலைமை செயலதிகாரி திருமணத்துக்கு சாட்சியாக இருந்தார்.

விமானத்தில் பயணம் மேற்கொண்ட கமதகுருமார்கள் அதிகாரபூர்வ ஆவணத்தை எழுதி கையெழுத்திட்டுள்ளனர்.

விமானத்தில் வைத்து பாப்பரசர் ஒருவர் நடத்தி வைத்த முதல் திருமணம் இது வாகும்.

(உ)

## தாம் கர்ப்பமாக இருப்பதை அறிவித்த நியூஸி. பிரதமர்



நியூஸிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் தான் கர்ப்பமாக உள்ளமை பற்றிய தகவலை அறிவித்துள்ளார். தானும், தனது கணவருமான கிளார்க் கேஃபோர்ட்டும் தங்களுடைய குழந்தை ஜூன் மாதம் பிறக்குமென்று எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அச்சமயத்தில் தான் ஆறு வாரகால விடுப்பு எடுக்கவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"2017 ஆம் ஆண்டு சிறப்பான ஆண்டாக அமைந்தது என்று எண்ணியிருந்தோம்" - என்றும் தனது இன்ஸ்டர்கிராம் சமூகவலைத்தளத்தில் அவர் பதிவிட்டிருந்தார்.

37 வயதாகும் ஜெசிந்தா ஆர்டர்ன், 1856 ஆம் ஆண்டுக்கு பிறகு, நியூஸிலாந்தின் இளம் வயது பிரதமராக உள்ளார்.

தாம் கர்ப்பமாக இருக்கிறார் என ஆர்டர்ன் அறிவிப்பு வெளியிட்ட பின்னர் அவரது சமூக வலைதளக்கணக்குகளில் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் குவிந்துள்ளன.

# கஸகஸ்தானில் 52 பயணிகள் பஸ் தீப்பிடித்ததில் கருகிப் பலி

கஸகஸ்தானில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று திடீரென தீப்பிடித்து, அதிலிருந்த 52 பேர் உடல் கருகி பலியாகினர்.

இதுகுறித்து அந்த நாட்டின் பேரிடர் மீட்புத் துறை அமைச்சகம் கூறியவை வருமாறு-

ரஷியாவின் சமாரா நகரிலிருந்து கஸகஸ்தானின் ஷிம்கென்ட் நகருக்கு வந்துகொண்டிருந்த பஸ்ஸில் வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) எதிர்பாராவிதமாகத் தீப் பிடித்தது.

விபத்து நேரிட்டபோது அந்தப் பஸ்ஸில் 55 பயணிகளும், 2 ஓட்டுநர்களும் இருந்தனர். திடீரென தீப்பற்றியதைத் தொடர்ந்து, அவர்களில் 5 பேர் மட்டும் பஸ்ஸிலிருந்து குதித்து உயிர் தப்பினர். மற்ற அனைவரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்த னர். தீயிலிருந்து தப்பிய 5 பேருக்கும் மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விபத்துக்கான



காரணம் குறித்து அந்த அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கஸகஸ்தானில் பதிவு பெற்ற அந்தப் பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என, விபத்தில் உயிர்பிழைத்த ஓட்டுநர் கூறினார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஸ்ஸில் ஏற்பட்ட தீ, மின்னல் வேகத்தில் பஸ் முழுவதும் பரவியதாகவும் அவர்கள் கூறினர்.

விபத்தில் சிக்கிய பஸ், ஹங்கேரியில் தயாரிக்கப்படும் இகாருஸ் ரகத்தைச் சேர்ந்தது என்று பேரிடர் மீட்புத் துறை தெரிவித்தது.

மிகவும் பழைய ரகமான இந்தப் பஸ்களை, முன்னாள் சோவியத் யூனியன் நாடுகள் அனைத்தும் பரவலாகப் பயன்படுத்தி வருகின்றன எனக் கூறப்படுகிறது.

# சசிகலா குடும்ப மோதல் உச்சம்

சசிகலா குடும்பத்தில் ஏற்பட்டுள்ள மோதல் தமிழக அரசியலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.



சொத்துக் குவிப்பு வழக்கில் தண் டனை உறுதிப்படுத்தப்பட்ட சசிகலா, பெங்களூர் சிறைக்கு செல்லும் முன்பு, தனது அக்கா மகன் டி.டி.வி. தினகரனை அதிமுக துணைப்பொதுச்செயலாளராக நியமித்தார். அதன்பிறகு முதல்வர் பழனிச்சாமி - ஓ.பி.எஸ். அணிகள் இணைந்ததால் சசிகலா குடும்பத்தினர் கட்சியில் இருந்து ஒதுக்கப்பட்டனர். அ.தி.மு.க. கட்சியும், இரட்டை இலை சின்னமும் பழனிச்சாமி -ஓ.பி.எஸ். அணிக்கு ஒதுக்கப்பட்டது.

**விதவிதமான கருத்துகள்**

இப்படி ஒருபுறம் கட்சியிலும், ஆட்சியிலும் அதிரடி மாற்றங்கள் நடந்து கொண்டிருக்க மறுபுறம் சசிகலா குடும்பத்தில் அவரது கணவர் நடராஜன், டி.டி.வி. தினகரன், திவாகரன் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்துகளைத் தெரிவித்து வந்தனர்.

தினகரன் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டமை முதல் சசிகலாவின் தம்பி திவாகரன் அவருக்கு எதிராகக் கருத்துகளைத் தெரிவித்து வருகிறார்.

கடந்த ஏப்ரலில் ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, பிரசாரத்தில் சசிகலா படங்களைத் தினகரன் பயன்படுத்தவில்லை. இது சசிகலா குடும்பத்தில் உள்ள சிலரால் விமர்சிக்கப்பட்டது.

விவரம் தெரியாத பெண் ஆர்.கே. நகர் இடைத் தேர்தல் வாக்குப் பதிவுக்கு ஒரு நாள் முன்பாக கடந்த டிசெம்பர் 20ஆம் திகதி மருத்துவமனையில் ஜெயலலிதா சிகிச்சை பெறும் வீடியோவை, தினகரனின் தீவிர ஆதரவாளரான பி.வெற்றிவேல் வெளியிட்டார்.

இதற்கு சசிகலாவின் அண்ணன் மகள் கிருஷ்ண பிரியா கண்டனம் தெரிவித்தமையுடன், தினகரனுக்குத் தெரியாமல் இது வெளியாக வாய்ப்பில்லை என்றும் தெரிவித்தார். இதற்கு தினகரன், கிருஷ்ண பிரியா விவரம் தெரியாத பெண் என பதிலடி கொடுத்தார்.





இந்நிலையில் கடந்த வாரம் தனியார் தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்த சசிகலாவின் கணவர் நட ராஜன், சசிகலாவுக்கு பரோல் பெற்று, வரும் ஜூன் மாதம் அவரும், நானும் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்ய இருக்கிறோம். சசிகலா உத்தரவு கிடைத்ததும் முதல்வர் பழனிச்சாமி மாற்றப்படுவார். தினகரனுக்கு ஓரளவு மக்கள் ஆதரவு உள்ளது.

தினகரனை விமர்சித்த கிருஷ்ண பிரியாவின் கன்னத் தில் அறைவேன் என அதிரடியாக பல கருத்துகளைத் தெரிவித்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு தனது முகநூலில் பதிலளித்த கிருஷ்ண பிரியா, சிறு பிள்ளைகளுக்குக் கூட மரியாதை அளிக் கப்படவேண்டும் என்ற கருத்துடையவள் நான். வயது வந்த குழந்தைகளுக்கு தாயாக இருக்கும் ஒரு பெண்ணை ஊடகத்தில் 'கன்னத்தில் அறைவேன்' என்று பெரியவர் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவர் கூறுகிறார். முதலில் அறைய முயலட்டும் என்று கூறியுள்ளார்.

**தனி அமைப்பு தொடக்கம்**

இப்படி சசிகலா குடும் பத்தில் வெளிப்படையாக மோதல்கள் நடக்க, சமரச முயற்சிகளும் நடந்துள்ளன. இந்தநிலையில் எம்.ஜி.ஆர். பிறந்த நாளில் புதிய கட்சி தொடங் குவேன் என தினகரன் அறிவித்தமை மோதலை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியான அன்றிரவே நேதாஜி பெயரில் தனி அமைப்பு தொடங்கப் போகிறாா் என திவாகரனின் மகன் ஜெய் ஆனந்த் அறிவித்தார். தினகரன் மீதான கோபத்தின் வெளிப்பாடே இந்த அறிவிப்பு என்று கூறப்படுகிறது.

இந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் திருவாரூர் மாவட்டம் மன்னார் குடியில் புதன்று நடைபெற்ற எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவில் பேசிய திவாகரன், அப்பலோ மருத்துவமனையில் இருந்த ஜெயலலிதா டிசெம்பர் 4ஆம் திகதி மாலை 5.15 மணிக்கே உயிரிழந்தார்.

(17 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# சக கட்சிகளை விமர்சிப்பது காழ்ப்புணர்ச்சியல்ல அவர்கள் விட்ட தவறை பகிரங்கப்படுத்தவே!

## டக்ளஸ் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 20 கடந்தகால அரசியல் தலைமைகளால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் தோற்றுப் போனமைக்கும் நிறைவேறாது போனமைக்கும் அந்த அரசியல் தலைமைகள் முன்வைத்த கோரிக்கைகள் நம்பிக்கையுடனோ அன்றி விசுவாசத்துடனோ செயற்படாமையே பிரதான காரணம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள டக்ளஸ் தேவானந்தா அந்த மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் ஏனைய சக அரசியல் கட்சிகளை விமர்சிப்பதென்பது ஒரு காழ்ப்புணர்ச்சி காரணமாக அல்ல. அவர்கள் வரலாற்றில்விட்ட தவறுகளையும் பிழைகளையுமே பகிரங்கமாகச் சுட்டிக்காட்டி வருகின்றேன்.

எமது நிலைப்பாடு என்பது எப்போதுமே நியாயத்தினதும் உண்மையினதும் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் எத்தனையோ சவால்களுக்கும் இடர்பாடுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்து மக்கள் நலன் சார்ந்த பல்வேறு அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்து எமது அரசியல்சாணக்கியத்தை வெளிப்படுத்தியிருந்தோம்.

ஆனால், தேசியவாதமும் தீவிரவாதமும் பேசிக் கொள்ளும் போலித் தமிழ் அரசியல் வாதிகளின் மத்தியில் புதிதாக முளைத்த பல்வேறு கட்சிகளும் வருகின்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போட்டியிடத் தயாராகி வருகின்றன.

ஆனாலும், இந்தக் கட்சிகளுக்கு மத்தியில் நின்றுதான் எமது வெற்றியை நாம் உறுதி செய்ய வேண்டும். அந்த வகையில் ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் மக்களுக்கும் உண்மைநிலைமைகளை யதார்த்தத்தைத் தெளிவு படுத்தவேண்டும்.

அதுமாத்திரமல்லாது, தீர்க்கப்படக் கூடியதான பல்வேறு பிரச்சினைகளுக்கு நாம் இந்த மாவட்டத்தின் பிரதேச சபைகளை வெற்றிகொள்ளும் பட்சத்தில் நிச்சயம் நிரந்தரத்தீர்வுகளைப்பெறுத்தருவோம்.



கிளிநொச்சி மாவட்டத்தைப்பொறுத்தளவில் ஒரு நகர சபையாக உருவாக்க வேண்டும் என்பதில் அரசிடம்நாம்விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் எதிர்காலங்களில் எமது கோரிக் கை நிச்சயம் நிறைவேறும் என்பதுடன் கண்டாவளை பிரதேச சபையை உருவாக்குவது தொடர்பிலும் கோரிக்கையை நாம்முன்வைத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தவிசாளர் மித்திரன், தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாக செயலாளரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான வை.தவநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அரசியல் லாபம் தேட முயற்சிப்போர் கிராமத்தினுள் பிரவேசிக்க வேண்டாம்!

## ஊர் மக்கள் வைத்த பதாகை



தேர்தல் என்பது மக்களை ஏமாற்றும் களமாக காலந் தொட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மக்களின் தேவைகளை உடன்பூர்த்தி செய்வதாக அள்ளி வீசப்படும் தேர்தல் வாக்குறுதிகள் வீசப்பட்டவையாக மாத்திரம் உள்ளமை நிதர்சனமாக உள்ளது என சமூக ஆர்வலர்கள் தற்போது சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், இலங்கையில் தற்போது இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களும், சுயேச்சைக் குழுக்களில் போட்டியிடும் வேட்பாளர்களும் பலதரப்பட்ட வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், டிக்கோயா, தரவளை பகுதியில் தற்போது அப்பகுதி மக்களால் வைக்கப்பட்டுள்ள பதாகைகள் காணப்படுகின்றன.

தமக்கான அடிப்படை வசதிகளைச் செய்துத் தருமாறு கோரி பல்வேறு தரப்பினரிடத்திலும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் எவரும் கண்டு கொள்ளாத நிலையில் இவ்வாறான பதாகை அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் மக்களின் பயன்பாட்டுக்காக காணப்படும் பாதையொன்றை செப்பனிட்டுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இதுவரை அப் பாதையை எவரும் செப்பனிட்டுத் தராமல் காலம் தாழ்த்தி வருவதன் காரணமாக இவ்வாறான பதாதையை அவர்கள் வைத்துள்ளனர் என அவர்கள் 'குறிப்பிட்டுள்ளனர்.

அந்த பதாகையில், அரசியல் சுயலாபம் தேட முயற்சிப்போர் உட்பிரவேசிக்க வேண்டாம்!

இப்பாதை சீரமைப்பை உறுதிப்படுத்திக் கொண்டு அவ் உறுதிப்படுத்தல்களுடன் உள்நுழையவும், என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த பதாகையை அகற்ற முனைந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அப்பகுதியினர் பதாகையின் மூலம் எச்சரித்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கை இணைக்க இடமளிக்கப் போவதில்லை!

## அமைச்சர் றிசாத் உறுதி

கொழும்பு, ஜன. 20 வடக்கையும், கிழக்கையும் இணைக்க ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனவும், இது தொடர்பான சகல சதித்திட்டங்களுக்கு எதிராகப் போராடப்போவதாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் அலுவலகம் ஒன்றை நேற்று முன்தினம் இரவு திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கை இணைக்க ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. பயங்கரவாதத் தலைவர் அன்று வடக்கு, கிழக்கில் இருந்து முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களை விரட்டினார்.

மக்கள் பல ஆண்டுகளாகத் துன்பத்தை அனுபவித்தனர். துன்பத்தை அனுபவித்த மக்கள் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் மீள குடியேறும் போது தெற்கில் உள்ள சில குழுக்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்த ஆரம்பித்துள்ளன.



இவர்கள் அனைவருக்கும் இந்தத் தேர்தல் மூலம் நாங்கள் பதிலளிப்போம். பிரதமரை போல் ஜனாதிபதியும் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார் அவர் கொடுத்த பணிகளை நாங்கள் சரியாக செய்துள்ளார் அவர் வருகிறோம். அன்று நஷ்டத்தில் இயங்கிய நிறுவனங்கள் இன்று இலாபத்தில் இயங்குகின்றன.

எம்மீது தவறான பிரசாரத்தை மேற்கொண்டவர்களுக்கும் இனவாதத்தைத் தூண்டியவர்களுக்கும் அஞ்சாது நாங்கள் சரியான பாதையிலேயே சென்றோம், எம்மால் எவருக்கும் எந்த சேதமும் இல்லை என்பதை இந்த தேர்தலில் நாங்கள் காண்பிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# துறைமுக ஊழியர்களின் உண்ணாவிரதப் போராட்டம் நிறைவு!

கொழும்பு, ஜன. 20 அம்பாந்தோட்டை மாகம்புறை துறைமுக சேவையில் இருந்து நீக்கப்பட்ட பணியாளர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட தீர்மானித்துள்ளனர்.

இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து தமக்கு சாதகமான முடிவு கிடைக்கப் பெற்றிருப்பதால் இந்த உண்ணா விரதத்தை கைவிடத்தாம் முடிவு செய்துள்ளனர்.

அம்பாந்தோட்டை, மாகம்புறை துறைமுக சேவையில் இருந்து நீக்கப்பட்ட பணியாளர்கள் கடந்த 9 ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

அம்பாந்தோட்டை, மாகம்புறை துறைமுகத்தை சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர்தாக நவம்பர் 30ஆம் திகதி முதல் இந்த ஊழியர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர் அத்துடன், அவர்களுக்குத் தீர்வு எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்





# உலக நட்சத்திர வீரர்கள் பங்கேற்கும் ஐஸ் கிரிக்கெட் சுவிஸ் பனிமலையில்

செயின்ட் மோரிட்ஸ், ஜன.20

உலகின் முன்னணி நட்சத்திர வீரர்கள் பங்கேற்கும் ஐஸ் கிரிக்கெட்போட்டி, சுவிற்ஸர்லாந்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டு நாள்கள் நடைபெற உள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் ஆல்ப்ஸ் பனிமலைத் தொடரில் அமைந்துள்ள அழகான பகுதி செயின்ட் மோரிட்ஸ் ரிசார்ட். கடல் மட்டத்தில் இருந்து 5910 அடி உயரத்தில் உள்ள இப்பகுதியில் வித்தியாசமான முயற்சியாக பனிக்கட்டி மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8 மற்றும் 9 ஆகிய திகதிகளில் இரண்டு ரி20 போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இதற்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலும் (ஐ.சி.சி.) அனுமதி அளித்துள்ளது.



டைமண்ட்ஸ்மற்றும்றோயல்ஸ் என்ற இரண்டு அணிகள் மோத உள்ள, இந்த ஐஸ் கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் விருப்பம் தெரிவித்து பெயர்களைப்பதிவுசெய்துள்ளனர்.

ரோயல்ஸ் அணியில் ஸ்மித், சோயிப் அக்தர், பிராவோ, அப்துல் ரசாக், மேட் பிரையர், நாதன் மெக்கலம், டேனியல் வெட்டோரி, கிராண்ட் எலியட், சாகித் அப்ரிடி, ஓவாயிஸ் ஷா போன்ற வீரர்கள் உள்ளனர். டைமண்ட்ஸ் அணியில் சேவாக், ஷீஹான், அஜித் அகர்கர், ஜெயவர்தன, டில்சான், மலிங்க, மைக்கேல் ஹசி, முகமது கயிப் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம்பெற உள்ளனர்.

கிரிக்கெட்டில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திய வீரர்கள் பனிக்கட்டி மைதானத்தில் பந்துகளை பறக்க விட உள்ளனர். இதனால் ஐஸ் கிரிக்கெட் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு திரும்பிய மகிழ்ச்சியில் டோனி

சென்னை,ஜன.20

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு திரும்பி இருப்பது பெருமை அளிப்பதாக மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியாசிமெண்ட் நிறுவனத்தின் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் இந்திய கிரிக்கெட் முன்னாள் அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி கலந்துகொண்டார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்குத் திரும்பி இருப்பது பெருமை அளிக்கிறது. சென்னை எனது இரண் டாவது தாய் வீடு. டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை சென்னையில்தான் நான் பதிவு செய்து உள்ளேன்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மீதுள்ள நம்பிக்கை மற்றும் ஆதரவே நமது பல மாக இருக்கிறது. அனைத்து வீரர்களும் திறமை வெளிப் படுத்தும் சூழல் சென்னை அணிக்கு எப்போதும் உள்ளது.

சென்னை அணி மீதான எதிர்பார்ப்பு இந்தாண்டு ஐ.பி. எல்.போட்டியை சிறந்ததாகமாற்றி இருக்கிறது. - இவ்வாறு அவர் கூறினார். (உ)



## சசிகலா குடும்ப மோதல்...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவனையின் பாதுகாப்புக் கருதி மறுநாள்தான் அவரது மரணம் அறிவிக்கப்பட்டது. - என்றார்.

**தனி விசாரணை ஆணையம்**

ஏற்கெனவே ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரிக்க தனி ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அவரது மரணம் தொடர்பாக பல்வேறு சந்தேகங்களைப் பலரும் எழுப்பி வருகின்றனர். இந்நிலையில், திவாகரன் பேசியமை தமிழகம் முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட தினகரன் 40 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றுள்ளார். இதனால் அவரது செல்வாக்கு அதிகரித்து வருவதை பொறுத்துக் கொள்ள முடியாமல் திவாகரன் பேசி வருகிறார் எனத் தினகரன் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நடக்கும் நிகழ்வுகளையும், குடும்ப உறுப்பினர்களின் பேச்சுகளையும் அறிந்த சசிகலா, கடும் கோபமடைந்தார் எனவும், ஆளாளுக்கு இப்படி பேசிக் கொண்டிருப்பார்களேயானால் எதிரிகள் வலுப் பெற்று நாம் பலவீனமாகி விடுவோம் என்று எச்சரித்தார் எனவும்கூறப்படுகிறது. அதனைத்தொடர்ந்தே புதிய கட்சி தொடங்கும் திட்டம் இல்லை என தினகரன் அறி வித்தார் என அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குடும்பத்தில் நடக்கும் மோதல்கள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள நடராஜன், நீரடித்து நீர் விலகாது. உறவுகள் மாறாது என்று தெரிவித்துள்ளார். ஆனாலும், மோதல்கள் ஓயாமல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

# இந்தியா வேகப் பந்து வீச்சு; பிரமித்தாராம் டி வில்லியர்ஸ்

கேப்டவுன், ஜன.20


செஞ்சூரியனில் இந்தியாவின் வேகப்பந்து வீச்சை பார்த்து பிரம்மித்து போனேன் என்று தென்னாபிரிக்காவின் முன்னணி வீரர் டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

இந்தியா – தென்னாபிரிக்கா இடையிலான மூன்று போட் டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடை பெற்று வருகிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இத்தொடர் தொடங்குவதற்கு முன் இந்திய பந்து வீச்சாளர்கள் 20 விக்கெட்டுக்களை கைப்பற்றுவார்களா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால், புவனேஸ்வர் குமார், மொகமது ஷமி, இசாந்த் சர்மா, பும்ரா ஆகியோர் மிகவும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். தென்னாபிரிக்கா அணியில் எந்த வீரரும் சதம் அடிக்கவில்லை. டி வில்லியர்ஸ் மட்டும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இரண்டு போட்டிகளிலும் இந்தியாவின் பந்து வீச்சைப் பார்த்து பிரம்மித்து போனேன் என்று டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

இது குறித்து டி வில்லியர்ஸ் மேலும் கூறுகையில் "இந்தியா உண்மையிலேயே என்னை ஈர்த்தது. வேகப்பந்து வீச்சில் அவர்கள் எங்களுக்கு ஆச்சரியத்தை அளித்தார்கள். வேகப் பந்து வீச்சில் அதிக அளவி லான திறமையை வெளி படுத்தினார்கள். நாங்கள் எதிர்பார்த்ததை விட வேகத்தில் பந்து வீசினார்கள்". – என்றார்.





டோனி முழு நம்பிக்கை

# அஸ்வினை சென்னை அணியில் நிச்சயம் சேர்த்துக்கொள்வோம்

அஸ்வினை ஏலத்தில் நிச்சயம் எடுப்போம் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு திரும்பியுள்ள மகேந்திர சிங் டோனி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

'ஸ்பாட் பிக்சிங்' விவகாரத்தில் சிக்கி சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் தடை செய்யப்பட்டிருந்தன. இந்த அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.

2 ஆண்டுகள் தடைக்குப் பின்னர் மீண்டும் மகேந்திர சிங் டோனி, சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா ஆகியோரை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தக்கவைத்துக் கொண்டது. இவர்களில் அதிகபட்சமாக டோனியின் சம்பளம் (இந்தியப் பணத்தில்) 15 கோடி ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரெய்னா 11 கோடி ரூபாவுக்கும், ஜடேஜா 7 கோடி ரூபாவுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழக வீரரும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அபிமான வீரருமான அஸ்வினை ஏலத்தில் எடுக்காமல் இருந்தமைக்கான ரசிகர்கள் பலர் சமூக வலைதளங்களில் தங்கள் வருத்தத்தை பதிவு செய்து இருந்தனர்.

இந்த நிலையில், இது குறித்து சென்னையில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசிய டோனி, வலிமையான அணியைத் தேர்வுசெய்வதே எங்கள் நோக்கம். அஸ்வினை நிச்சயம் ஏலத்தில் எடுப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. அணியில் உள்ளூர் வீரர்கள் இடம்பெறுகின்றமை அவசியம். பிராவோ, டுபிளெசிஸ், மெக்கலம் ஆகியோரையும் கருத்தில் கொள்வோம். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாலக சில்வாவுக்கு எதிரான பிடியாணை விலக்கப்பட்டது

பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட மாலக சில்வா நேற்று நீதிமன்றில்சரணடைந்தார். இதையடுத்து அவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனான மாலக சில்வா மீது கேளிக்கை விடுதியொன்றில் ஸ்கொட்லாந்து தம்பதியரைத் தாக்கிய குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காதமையை அடுத்தே அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்றுக் காலை நீதிமன்றில் சரணடைந்த அவர், உடல் நிலைப் பிரச்சினைகளாலேயே விசாரணைக்கு சமுகமளிக்க முடியாமல் போனதாகக் கூறி, அதற்கான மருத்துவச் சான்றிதழ்களையும் நீதிமன்றில் கையளித்தார். இதையடுத்து, இந்த வழக்கின் விசாரணை எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## இயலாவிட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அக்கேள்வியும் அதற்கு அவர் அளித்த பதிலும் வருமாறு:-

கேள்வி:- மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய தமிழர்களின் அரசியல் இன்று சுயநல வாதத்துடன் வெறும் கட்சி அரசியலாகவே முன்னெடுக்கப்படுகின்றது. அனுபவசாலிகள் என்றும் வயதில் மூத்தவர்கள் என்றும் பெருமித்துக் கொள்கின்ற ஒரு சிலரின் சர்வாதிகாரப் போக்கினால் இன்று ஒற்றுமையாக இருந்த கட்சிகள் சிதறுண்டு போயுள்ளன. அதனால் அரசியல்வாதிகளுக்கு ஏதேனும் நன்மைகள் கிட்டலாம். ஆனால், பாதிக்கப்படுகின்றவர்கள் தமிழ் மக்களே. இந்நிலையில் இருந்து மீண்டெழுந்து தமிழர்கள் தமது இருப்பினைதக்கவைத்துக்கொள்வார்களா? அதற்காகஅவர்கள் செய்யவேண்டியதுஎன்ன?

பதில்:- நான் இதுவரை காலமும் கூறிவந்ததின் சாராம் சத்தையே ஒரு கேள்வியாக பலரையும் மறைவாக ஈடுபடுத்தி என்னிடம் கேட்டுள்ளீர்கள். பெரும்பான்மை இனத்தவர்கள் சிறுபான்மையினரை இளைய சகோதரர்களாகப் பார்ப்பார்கள், பண்புடன் நடந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே ஆங்கிலேயர்கள் எமது முதல் அரசியல்யாப்பை எமக்குத்தந்துதவிச்சென்றார்கள்.

ஆனால், அப்போதைய பெரும்பான்மை இனத்தலைவர்களிடம் உள்ளொன்றும் புறமொன்றும் இருந்ததை ஆங்கிலேயர்கள் அறிந்திருக்கவில்லை. ஏன் எமது தமிழ்த் தலைவர்கள் கூட அப்போது புரிந்திருக்கவில்லை. புகழ்ச்சிக்கு மயங்கி விட்டார்கள் அவர்கள் என்றே கொள்ள வேண்டியிருக்கின்றது.

### பசப்பு வார்த்தைகளில் சிறைப்பட்டார்

உதாரணத்திற்குவிண்ணாதி விண்ணனானபேராசிரியர் சி.சுந்தரலிங்கம் அவர்கள் கூட டி.எஸ். சேனாநாயக்காவின் பசப்பு வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டுச் சிறைப்பட்டுவிட்டார் என்றே கொள்ள வேண்டியுள்ளது. சிங்களவர் மட்டும் அமைச்சரவையை ஏற்படுத்திக் கொடுத்தது அவரே (Pan Sinhala Cabinet). அதனால் தான் இன்று நாம் நேரடியான எதிரிகளை வரவேற்கின்றோம். சேர்ந்திருந்து குழி தோண்டும் எமது நண்பர்கள் மீதுவிழிப்பாய் இருக்கின்றோம். சூடுபட்ட பூனை அடுப்பங்கரை ஏறாது!

எமதுநாட்டின் ஆங்கிலேய ஆளுநர் நாயகமாகத் திகழ்ந்த சோல்பரி பிரபு தமதுநண்பர் B.H. Farmer என்பவரிடம் தாங்கள் கொடுத்தஅரசியல் யாப்பு தோல்வியுற்றதுஎன்று கூறி 1958ஆம் ஆண்டில் நடந்தவற்றைப் பார்க்கும் போது இலங்கைக்கு ஒரு சமஷ்டி ரீதியான அரசியல் யாப்பைக் கொடுத்திருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது என்று கருத்துத் தெரிவித்தாராம்.

### புரிந்து கொள்ளாத தமிழர் தலைமைகள்

இவ்வாறாக சிறுபான்மையோரை முடக்கும் அரசியலானது சிறுபான்மை மனோநிலை கொண்டபெரும்பான்மை அரசியல் தலைவர்களால் அரங்கேற்றப்பட்டமையை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏதோ காரணத்தினால் அப்போதைய சிங்களத் தலைவர்கள் தென்னிந்திய தமிழர்களையும் சேர்த்துக் கூட்டி சிங்களவர் உலகில் ஒரு சிறுபான்மையினமே என்றும் தம்மைப் பாதுகாத்தல் அவசியம் என்ற எண்ணத்திலும் தமிழ் மக்களை வதைத்து. வருத்தி, வாழவிடாது செய்யத் துணிந்தார்கள்.

நீங்கள் கூறும் தமிழ்த் தலைமைகள் ஒருவேளைஅதைப் புரிந்துகொள்ளாது நடக்கின்றார்களோ நான் அறியேன். வெறும் சுயநலக் காரணங்களுக்காக மட்டும் பெரும்பான்மைமக்கள் தலைவர்களின் பசப்புவார்த்தைகளில் மயக்கம் அடைந்துள்ளார்கள் அவர்கள் என்று கூறஎன் மனம்விடவில்லை. உண்மையில் நம்பினார் கெடுவதில்லை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பெரும்பான்மைத் தலைவர்களை அவர்கள் நம்பி வருகின்றார்கள் என்று கூடக் கூறலாம்.

ஆனால் அவர்களின் செயலில் எனக்கிருக்கும் ஆதங்கம் வேறு. 'தருவதைத் தாருங்கள்' அல்லது 'தருவதைப் பெறுவோம்' என்று கூறுவது ஒன்று. 'தந்ததுடன் நாங்கள் திருப்தி அடைகின்றோம்' என்று கூறுவது வேறு. எங்கே எமது தலைமைத்துவங்கள் குறைந்ததையேற்று எமது வருங்காலத்தை குறைபாடுடையதாக ஆக்கி விடுவார்களோ என்றே அஞ்சுகின்றேன்.

அரசாங்கம் தருவதைத் தருவது அவர்கள் இஷ்டம். ஆனால் எமது வாழ்வுரிமை, வரலாற்றுரிமை, வள உரிமைவேறு. அதை நாம் விட்டுக்கொடுக்க முடியாது. விட்டுக்கொடுத்தால் வடகிழக்கு மாகாணங்கள் பெரும்பான்மை இனத்தவரைப் பெரும்பான்மையாக நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு 25 வருடங்கள் தேவையில்லை.

இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இதைப் புரியாமல் நாம் பிடித்தமுயலுக்கு மூன்று கால்களே என்று ஆக்ரோஷமாக அடித்துப்பேச முற்பட்டோமானால் எமது அழிவுவெகு தூரத்தில் இல்லை என்பதே எனது கருத்து. இதைஉணர்ந்தேஎம்சகோதரர்கள் மக்கள் பாற்பட்ட,மக்கள் மயப்பட்ட ஒரு போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என்று முடிவெடுத்துள்ளார்கள். அதாவது மக்களின் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் எங்கே மக்கள் மனம்அறியாமல்எமதுமாண்பை மலினப்படுத்தி விடுவார்களோ என்ற பயம் பலர் மனதிலும் இப்பொழுது எழுந்துள்ளது.

### இனி, அவசியமானது மக்கள் போராட்டம்

ஆனால், கட்சிகள் சிதறுண்டமையின் காரணம் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படவேண்டும். காரணங்களை இவைதான் என்று மிக எளிமையாகச் சுட்டிக்காட்ட முடியாது. அது எமக்குத் தேவையுமில்லை. ஏன் என்றால் நீங்கள் கூறுவதுபோல அனைத்துத் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்துப் போராட வேண்டிய நிலைமையே இன்று பரிணமித்துள்ளது. காரணங்கள் எதுவாக இருந்தாலும் தருவதாகக் கூறியவற்றை பெரும்பான்மையினம் தருவதாக இல்லை. 2016இல் தரப்படுவன என்று எதிர்பார்த்த எமது கனவான் நெஞ்சங்கள் கருகியுள்ளன. இன்று கனன்று கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் நடக்க வேண்டியது என்ன என்று கேட்டு உங்கள் கேள்வியே பதிலைத் தந்துள்ளது. மக்கள் போராட்டமே அது. மக்கள் போராட்டத்திற்கு சில அடிப்படைகள் தேவையாகவுள்ளன. எமது போராட்டம் நாம் மனமுவந்து போராடும் ஒன்றாக இருக்கவேண்டும். போராட்டத்துக்கான காரணம் பற்றி நாம் ஒவ்வொரு வரும் அறிந்திருக்கவேண்டும்.

வெறுப்பு,கோபம்,ஆத்திரம் ஆகியவற்றைக் களைந்திருக்கத் தெரியவேண்டும். வெறும் பொருளாதார நன்மைகள் பெறப்பட்டால் நாம் போராட்டத்தை கைவிட்டுவிடுவோம் என்று இருக்கக்கூடாது.

கேப்பாப்பிலவுமக்களைப் பாருங்கள். தொடர்ந்துபோராடி வருகின்றார்கள். தாம் அடைய வேண்டியவாழ்வுரிமை இலக்கை எட்டஅரசாங்கம் முட்டுக்கட்டையாக இருந்துவருவதே இதற்குக் காரணம்.

### இயலாவிட்டால் ஒதுங்குங்கள்

எம்முள் பலர் கூடி எமக்கென ஒரு வழி சமைத்தோம். எமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் அவற்றை உள்ளடக்கினோம். அவை கிடைக்கமாட்டா என்று தமிழ்த்தலைமைகள் தீர்மானித்தால் தமது தலைமைத்துவத்தை வேறுயாரிடமாவது கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்வதே உசிதம்.

நாம் கேட்பவை கிடையாது, ஆகவே தருவதை ஏற்போம் என்று கூறுவது தர்மம் ஆகாது. நாம் போராடுவது ஒரு தார் மீக உரிமைக்காக. நியாயமற்ற காரணங்களுக்காக அல்ல. எம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் எங்களிடம் திருப்பித் தருமாறு கேட்பது தவறானதொரு கோரிக்கையாகாது. ஆகவே, ஒன்றிணைந்து ஒரு மித்து எமது தேவைகளை, உரிமைகளைக் கோரவேண்டியதே தற்போது எமக்கிருக்கும் தார்மீகக்கடமை. உலகில்வாழும் சகல தமிழ் பேசும் மக்களும் எமக்கு இது சம்பந்தமாக உதவி அளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடிகள் உட்பட வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப்பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டைதீவு கடலில் நேற்று மாலை 5 மணியளவில் பச்சை நிறமரத்தாலானபெட்டியொன்று மிதந்து வருவதை மீனவர்கள் சிலர் அவதானித்துள்ளனர்.

அதனையடுத்து அந்த சந்தேகத்திற்கு இடமான பெட்டி தொடர்பில்மண்டைதீவுபொலிஸ் காவலரணுக்கு மீனவர்களால் தகவல் வழங்கப்பட்டது. அப்பெட்டியை ஊர்காவற்றுறை பொலிஸார் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பெட்டிக்குள் 4 கண்ணி வெடிகள் உட்பட வெடிபொருள்கள் அடைக்கப்பட்டி ருந்தன. மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நீதிமன்றின் அனுமதியுடன் அவை செயலிழக்கச் செய்யப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## குழந்தையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர் இருக்கும் வீட்டைத் தனது பெயருக்கு மாற்றுமாறு தாயாரிடம் அவர் கேட்டு வந்தார். எனினும், பெற்றோர் அதற்குச் சம்மதிக்கவில்லை. மது போதையில் தினமும் வீட்டுக்கு வந்து பணம் அல்லது வீட்டைத்தா எனத் தொந்தரவு கொடுத்துள்ளார்.

அதேபோன்றே நேற்று காலையும் வந்து தாயாருடன் சண்டை பிடித்துள்ளார். தாயாரை அவர் கைக்கோடரியால் தாக்கியுள்ளார்.

வீட்டின் ஹோலில் நின்ற இளைய சகோதரனின் 3 வயது பெண் குழந்தையைப் பிடித்து அவளின் கழுத்தைக் கத்தியால் வெட்டியுள்ளார்.

குழந்தை வீட்டு வாசல்வரை ஓடிவந்துவிழுந்துஉயிரிழந்துள்ளாள் என்று ஆரம்ப விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு 56 ஆறாயிரத்து 66 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

அவர்களில் அறுபது பேர் கிரிமினல்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளதாம்.

குற்றங்களும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட வேட்பாளர் எண்ணிக்கையும் வருமாறு:-

★ கசிப்பு, சூதாட்டம் – 14 பேர்

★ அடி, தடி, ரகளை – 6 பேர்

★ கொலை மற்றும் கிரிமினல் குற்றங்கள் – 6 பேர்

★ ஊழல், நிதி மோசடி, கொள்ளை, சூறையாடல் – 14 பேர்

★ பாதாள உலகக் குழுவினர் – 5 பேர்

★ பாலியல் வன்புணர்வு – ஒருவர்

★ மரக்கடத்தல் – 4 பேர் – எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பிள்ளைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைக்கு அப்பிள் உட்பட உணவுப் பொருள்களையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்துள்ளனர்.

தமது வீட்டு வாசலில் மக்கள் கூடியிருப்பதை அவதானித்து பதறியடித்துக் கொண்டு வந்த அவர்களிடம் நடந்த விபரீதத்தை உறவினர்கள் எடுத்துரைத்தனர். அதைக் கேட்டு கத்திக் குளறிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்த அவர்கள், கோரமாக வெட்டிச் சாய்க்கப்பட்டு கிடந்த தங்கள் குழந்தையின் சடலத்தைக் கண்டு மயங்கிச் சாய்ந்தனர்.

அவர்களை உறவினர்கள் ஆசுவாசப்படுத்தினர்.

## பிரசாரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் இடத்திலிருந்து 400 மீற்றருக்கு உள்பட்ட பகுதியை மட்டுமே அலங்கரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தோரணங்கள்உள்ளிட்டஅலங்காரங்கள் கூட்டம் நடைபெறும் பகுதிக்குள் மாத்திரமே இடம்பெற வேண்டும். நீண்ட காலத்துக்கு கட்டவுட் காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டம் மீறப்படுவது தொடர்பான தகவல்கள் இருக்குமாயின்அருகிலுள்ளபொலிஸ் நிலையத்துக்கு அல்லது தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவேண்டும்.

உள்ளூராட்சிமன்றதேர்தலை இலக்காகக் கொண்டு சட்ட விரோதமாக ஒட்டப்படும் சுவரொட்டிகள் மீதும், அத்தோடு இந்தக் காலப்பகுதியில் அரசின் செலவில் விநியோகிக்கப்படும் உதவிப் பொருள்கள் மீதும் ஒட்டுவதற்கான 'ஸ்ரிக்கர்கள்' தயாரிக்கப்பட்டுள்ளன.

எவரேனும் தேர்தல் விதிமுறைகளை மீறும் குற்றச்சாட்டு இருக்குமாயின் அவற்றை சமூக இணைத்தளங்களில் வெளியிடாமல் பொலிஸாருக்கு தெரிவிக்கவேண்டும்.

சட்டத்தை மதிக்கும் தேர்தலை நடத்தி முடிக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்" – என்று தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது, அவர் சென்ற படகு மட்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இரு தினங்கள் மீனவர்கள் இணைந்து தேடிய போதும், மீனவர் தொடர்பான தகவல் கிடைக்கவில்லை.

இந்நிலையில் நேற்றுக் காலை கடலில் மிதந்த மீனவரின் சடலத்தை மீனவர்கள் மீட்டுக்கரைக்கு கொண்டுவந்தனர்.

சடலத்தைப் பொறுப்பேற்ற வங்காலைப் பொலிஸார் மன்னார் வைத்தியசாலையில் அதனை ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை வங்காலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகிறனர்.

## பிணைமுறிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைக் கூறியிருக்கிறார்.

2008ஆம் ஆண்டு முதல் இடம்பெற்றிருக்கும்பிணைமுறி மோசடியில் பல்லாயிரம் கோடி ரூபா நாட்டுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்தக் கைங்கரியத்தில் பங்களிப்புச் செய்த அனைவரும் தண்டிக்கப்படுவர் என்றும்ஜனாதிபதிதெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு வைத்தியர்கள் அநேகர் தெற்கில்! சொந்த மண்ணில் பற்றில்லை அவர்களுக்கு!!

## வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவிப்பு






வவுனியா, ஜன. 20

நான் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்னுடைய மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளுக்குச் சென்றால் அங்கு நந்தகுமார், புஸ்பகுமார், முருகேசு என வைத்தியர்கள் பணியாற்றுகின்றனர்.

ஆனால், வடக்கில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுகிறது. சொந்த மண்ணில் மக்கள் பணியாற்ற வைத்தியர்கள் முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்தமைக்கு பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஊக்கமும் காரணமாக அமைந்துள்ளது. ஆனாலும், எல்லா வளங்களும் இருந்தாலும் மாணவர்களின் அக்கறையும், உற்சாகமும் இல்லை என்றால் வெற்றிப் பெற முடியாது. இந்த வெற்றியும் சாதனையும் உங்களுக்குரியது மட்டுமல்ல பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் வெற்றியே.

நீங்கள் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் சேவைசெய்ய வேண்டும். வடக்கில் படித்துவிட்டு கொழும்புக்கு சென்று சேவையாற்றுகின்றார்கள் வடக்கில் பதினைந்து வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லை. அவர்கள் எங்கே என்றால் எங்களுடைய பகுதியில் அதாவது தெற்கில் சேவை செய்கின்றார்கள்.

இதனைவிடவும் வெளிநாட்டுக்குச் சென்று விடுகின்றார்கள். எனவே பிறந்த மண்ணுக்கு சேவைசெய்ய முன்வர வேண்டும்.

இதனைவிட எல்லா வசதிகளும் உள்ள பாடசாலைகளும் சரி மாணவர்களும் சரி அவர்கள் சாதிப்பதில்லை. உதாரணமாக சாதிக்க வேண்டும் என்ற பசி இருக்கிறது கொழும்பில் உள்ள றோயல் கல்லூரி போன்ற பல முன்னணி பாடசாலைகளில் சாதனை பெறுபேறுகள் இல்லை.

இதனை விட உங்கள் எல்லோருக்கும் தெரியும் அநுர பண்டாரநாயக்க என்ற அரசியல்வாதியை அவரின் தாய் நாட்டின் பிரதமராக இருந்தார் அப்பா பிரதமராக இருந்தார் அக்கா ஜனாதிபதியாக இருந்தார். ஆனால், அனுரா நாடாளுமன்ற உறுப்பினராக வந்தார் அதற்கு மேல் அவரால் வர முடியாது போய் விட்டது.

ஆனால், நான் ஒரு நூறு கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்து வந்து எம்.பியாக அமைச்சரவை அமைச்சராக வந்தேன் அநுரவுக்கு முடியாது போய்விட்டது. ஏன் எல்லா வசதியும் இருந்து முன்னுக்கு வரவேண்டும் என்ற முயற்சி இல்லை. மேலும் கிராமத்தில் ஏழை குடும்பத்தில் இருந்து வந்த சுசந்திக்கா ஒலிம்பிக்கில் வெற்றிபெற்றார் எனவே குறைபாடுகள் சாதிப்பதற்கு ஒரு தடையல்ல.

இலங்கையின் கல்வித் துறையில் ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் சிறந்து விளங்கியது. நாட்டில் படித்தவர்கள் எல்லாம் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் வந்தார்கள். எனவே, இப்போது யுத்தம் இல்லை- சமாதானம் நிலவுகிறது. ஆகவே, மீண்டும் வடக்கு மாகாணம் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர் களை கௌரவித்தனர்.

(70)

# மாதிரி வாக்குச் சீட்டில் போலிச் சின்னம் அச்சிட்டு விநியோகிக்கிறது கூட்டமைப்பு

## தேர்தல் ஆணைக்குழுவில் சந்திரகுமார் முறைப்பாடு



கிளிநொச்சி, ஜன. 20

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளிலும் சுயேச்சைக் குழுவாக கேடயச் சின்னத்தில் போட்டியிடுகிறோம்.

எங்களது சுயேச்சைக் குழுவின் சின்னம் கேடயம் என்பது மக்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் நிலையில் எமது சின்னத்தை மாற்றி போலி மாதிரி வாக்குச் சீட்டு ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இது தேர்தல்சட்ட விதிமுறை மீறல் இது தொடர்பில் கிளிநொச்சி உதவி தேர்தல் ஆணைக் குழுவிடம் முறையிட்டுள்ளோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி அக்கராயன் வட்டாரத்தில் ஸ்கந்தபுரம் கிராமத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரம் செய்கின்றபோது சட்டத்திற்கு புறம்பாக மாதிரி வாக்கு சீட்டுக்களை மக்களிடம் விநியோகித்துள்ளனர்.

இதில்கரைச்சி பிரதேசத்தில் ஒன்பது அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவான எங்களுடைய சுயேச்சைக் குழுவும் போட்டியிடுகின்றன. இந்த நிலையில் ஏனைய எல்லா கட்சிகளினது சின்னத்தைச் சரியாக அச்சிட்டு தங்களுடைய வீட்டுச் சின்னத்திற்கு புள்ளடியிட்ட வாக்கு சீட்டை விநியோகித்துள்ளனர்.

இதில் வேண்டுமென்றே எங்களுடைய கேடயச் சின்னத்திற்குப் பதிலாக வெற்றிக் கிண்ணத்தை அச்சிட்டு போலி மாதிரி வாக்குச் சீட்டை வழங்கி மக்களை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் எனத் தெரிவித்த அவர், எங்களுடை வெற்றி கண்டு அச்சமடையும் இவர்களே இவ்வாறு கீழ்த்த ரமான செயற்பாட்டை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்த முறைப்பாடு தங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. மாதிரி வாக்குச் சீட்டுக்கள் அச்சிட்டு வெளியிடுகின்றமை தேர்தல் சட்டத்திற்கு முரணானது. இது தொடர்பில் விசாரித்து வருகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (70)

# வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு ஐவர் சிங்கள குடியேற்றத்தால் தெரிவாகும் நிலை

## எச்சரிக்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.



வவுனியா மாவட்டத்தில் அதிகரித்துள்ள சிங்கள குடியேற்றங்கள் காரணமாக உள்ளூராட்சி சபைக்கு ஐந்து சிங்கள பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எச்சரித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா வடக்கு பிரதேசத்தில் தென்பகுதியில் இருந்து கலாபோகஸ்வெவ போன்ற இடங்களில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது சிங்கள குடியேற்றங்களைச் செய்திருந்தனர்.

இதன் காரணமாகவே, உள்ளூராட்சி சபைக்கு ஐந்து சிங்கள பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஆகவே, வவுனியா வடக்கு பிரதேசசபையை எங்களது கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்றால் இந்த வாக்குகள் சிதறாமல் இருந்தால் மாத்திரமே சாத்தியம்.

அவ்வாறில்லையெனில், இந்த பிரதேச சபையின் தவிசாளர் கூட பெரும்பான்மையினராக மாறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிணைமுறி அறிக்கையில் 103 பக்கங்கள் மாயம் என்று கூறுகின்றார் கம்மன்பில!

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான நீதிபதி கே.ரி.சித்ரசிறி தலைமையிலான ஆணைக்குழுவின் அறிக்கையில் 103 பக்கங்கள் காணாமல் போயிருக்கின்றன என கூட்டு எதிரணியின் நாடாளுன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் இந்த அறிக்கையை இணையத்தில் வெளியிட்டுள்ளது. அதில் 1154 பக்கங்களே உள்ளன. ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 3 ஆம் நாள் நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது, ஆணைக் குழுவின் அறிக்கை 1257 பக்கங்களில் இருப்பதாகக் கூறியிருந்தார்.

எனவே காணாமல்போயுள்ள 103 பக்கங்கள் தொடர்பாக ஜனாதிபதி விளக்கமளிக்க வேண்டும்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான பக்கங்களே காணாமல் போயிருக்கக் கூடும் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



### வடக்கில் நிரந்தரமாக நிலைகொள்ள

# இராணுவத்தினர் சாமர்த்தியமாக காய் நகர்த்தல்!

### முதல்வர் விக்கி குற்றச்சாட்டு



வட மாகாணத்தில் தொடர்ந் தும் நிலை கொண்டிருப் பதற்காக இராணுவத்தினர் சாமர்த்தியமாக காய்களை நகர்த்தி வருகின்றனர் என வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் பல அபி விருத்தி வேலைத்திட்டங்களுக்கு இராணுவத்தினர் ஈடு படுத்தப்படுகின்றமை ஊடாக, இராணுவத்தின் பிரசன் னத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வி யில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“கடந்த காலங்களில் தமிழ் மக்களைக் கொடூரமாகக் கொன்று குவித்தும், கற்பழித்தும் மற்றும் சித்திரவதை செய்தும் அரக்கர்களாக மக்கள் மனதில் நிலை கொண் டிருந்த இராணுவத்தினர், தற்போது மக்களுக்கு நல்லது செய்வதன் மூலம் புதிய அவதாரத்தை எடுத்துள்ளனர். இதன்மூலம் அவர்கள் நிரந்தரமாக வடமாகாணத்தில் நிலை கொண்டிருப்பதற் கான வாய்ப்புக்களை ஏற்படுத்த முயல்கின்றனர்.

இராணுவத்தினர் தற்போது, புதிய யோசனைகளுடன் களமிறங்கியுள்ளனர். அதாவது, மக்களுக்கு வீடுகள் மற்றும் கழிவறைகள் அமைப்பதற்கு உதவிகளைச் செய்து கொடுப்பதன் மூலம், நன்மதிப்பைப் பெற்று வரு கின்றனர். இதன் மூலம் இராணுவத்தினர் வெகு சாமர்த் தியமாக காய்களை நகர்த்தி வருகின்றனர்.

இராணுவத்தினர் வசமுள்ள சுமார் 60 ஆயிரம் ஏக் கர் காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இவ் வாறு கையகப்படுத்தியிருக் கும் காணிகளிலிருந்து மரங் கள் வெட்டப்படுவதை நான் அறிந்து கொண்டுள்ளேன். எனினும், அது யார் தலைமையில் நடைபெறுகிறது எனத் தெரியவில்லை. – என்றார் அவர்.

# கோட்டாபயவின் உயரிய சேவை மறந்து விடாதீர்!

### விநயமாக வேண்டுகிறார் மஹிந்த

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்காக முன்னெடுத்த வேலைத் திட்டங்களை இலங்கை மக்கள் எவரும் மறந்து விடக்கூடாது எனவும், மக்கள் விட்ட தவறை சரி செய்யும் இன்னொரு வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது எனவும் முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கொழும்பு மிகவும் அழகாகப் பராமரிக்கப்பட்டது. எமது ஆட்சியில் பாது காப்பு செய லாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்றிட்டங்களின் கீழ் மிகச் சிறந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அவரின் வேலைத் திட்டங்கள் எவற்றையும் இலங்கை மக்கள் எவரும் மறந்து விடக்கூடாது.

இன்று கொழும்பின் நிலைமை மிகவும் மோசமான தாக உள்ளது. அபிவிருத்தி அனைத்துமே தடைப்பட்டுள் ளன. சரியான வழி நடத்தல் ஒன்று இல்லாமையே இதற் குக் காரணமாகும்.

இப்போது மக்கள் எடுக்கும் தீர்மானமே அடுத்த கட்ட மாக நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்ல ஆரம்பமாக அமையும். மக்களின் தீர்மானமே நாம் எமது போராட்டத்தை அர சாங்கத்துக்கு எதிராக மாற்றிய மையை ஊக்கப்படுவதாக அமையும்.

திருடர்களைத் தண்டிப்பார் என மேடையில் கூறிக் கொண்டு, திருடர்களுடனே கைகோத்து அமைச்சரவை யில் ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார் எனவும் மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

# உதயங்கவின் சொத்துகளுக்கு எதிராக நேற்றுத் தடை உத்தரவு



கொழும்பு, ஜன.20

ரஷ்யாவுக்கான முன்னாள் தூது வர் உதயங்க வீரதுங்கவுக்கு சொந்த மான தொம்பே பிரதேசத்தில் உள்ள 2 காணிகளை உரிமை மாற்றுதல், ஈடு வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றுக்குத் தடை விதித்து கொழும்பு கோட்டை நீதி வான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன, அத்தனகல்ல காணிப்பதிவாளருக்கு நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதேவேளை, அவருக்கு சொந்த மான பொரளை, எல்விட்டிகல மாவத் தையில் அமைந்துள்ள ட்ரில்லியன் ரெசிடன்சீஸ் கட்டடத்தையும் உரிமை மாற்றுதல், ஈடு வைத்தல் மற்றும் விற் பனை செய்வதற்குத் தடை விதித்து கொழும்பு காணிப்பதிவாளருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.